## அதிகாரம் 12

# கானானுக்குச் செல்ல ஆபிரகாமின் அழைப்பு

உலகத்தில் பாவத்தைப்பற்றிய குறிப்புகளையும் ஜலப் பிரளயத்தின் மூலமாக தேவனுடைய தண்டனையையும் தொடர்ந்து (அதிகாரங்கள் 1-11), ஆதியாகமத்தில் இரண்டாவது முக்கிய பிரிவானது கவனக்குவிப்பு கொண்டதாக குறுகி உள்ளது (அதிகாரங்கள் 12-50). தோட்டத்திலே அவர்களது கீழ்ப்படி யாமையின் எதிர்ப்பினாலே, உண்டான சாபத்தை முறிக்க தேவனாகிய கர்த்தர் அவரது திட்டத்தை அமல்படுத்த ஆரம்பித்து, மனித சமுதாயத்திற்காக தீர்மானம் எடுத்திருந்தார். உடன் படிக்கையின் ஜனங்களுக்காக, இஸ்ரவேல் தேசத்தை ஸ்தாபிக்க, கர்த்தர் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு என்பவர்கள் மூலமாக அவர் கிரியை செய்ய ஆரம்பித்திருந்தார். இந்த வம்சாவளியில் இருந்து மேசியா (அதன்படி, முன்னோர் வழியில், மனித ரூபம் எடுத்து) இறுதியாக, இப்பூவுலகிற்கு இறங்கி வருவார்.

ஆபிரகாமிற்கு கர்த்தரின் அழைப்பு மற்றும் அவர் முதலில் அவனுக்கு அளித்த வாக்குத்தத்தங்கள் பற்றியும், ஆதியாகமம் 12ம் அதிகாரம் கூறுகிறது. மேலும், அந்த அழைப்பிற்கு ஆபிரகாமுடைய சாதகமான செயல்பாடு மற்றும் வாக்குத்தத்த பூமியான கானானை சென்று அடைந்தது பற்றியும் அது தெரிவிக்கிறது. இந்த அதிகாரத்தின் முடிவிலே, ஒரு பஞ்சத்தின் காரணமாக, எகிப்திலே பரதேசியாய் சஞ்சரித்துக் கொண்டிருந்தான் எனச் சுட்டிக் காட்டுகிறது. கோத்திரத்தலைவனிடம் ஏமாற்றும் குணம் இருப்பினும், கர்த்தர் அவனுடைய குடும்பத்தை பாதுகாத்ததுடன், அவரது தெய்வீக வாக்குத்தத்தங்களையும் பாதுகாத்தார்.

### ஆபிரகாமின் அழைப்பு (12:1-3)

**[1]கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. [2]நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். [3]உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச்**

**சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.**

**வசனம் 1.** கர்த்தர் ஆபிரகாமை இதற்கு முன்பே ஒரு முறை அழைத்திருக்க வேண்டும் (காண்க 11:31) என்று ஆதியாகமத்தை ஆக்கியோன் அனுமானித்துள்ளார். அவர் அவனை தெற்கு மெசெப்பொத்தோமியாவில் உள்ள பழங்கால ஊர் என்ற நகரத்திலிருந்து பயணத்தைத் தொடங்க அழைத்துள்ளார். ஆதியாகமம் 15:7, மற்றும் நெகேமியா 9:7இல் கூட மற்றும் அப்போஸ்தலர் 7:2-4 வசனங்களில், இந்த காரியம் சொல்லப் பட்டுள்ளது. கோத்திரத் தலைவன் ஆரானில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்திருந்தாலும், அது அவனது சொந்த பூமியாக எண்ணிக் கொண்டிருக்கும் சமயத்தில், ஆரானை விட்டுப் பயணப்படும்படி, ஆபிரகாமிற்கு கர்த்தருடைய அழைப்பு வந்தது. ஆகவே கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: **நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்குப் போ** என்று சொல்லியது மிக முக்கியமான தெய்வீக நோக்கம் உடையதாகும். இந்த அழைப்பில், ஆபிரகாமுடைய பிரயாணத்திற்கு கிளம்புவதையும் சேர்த்து எல்லா அறிவுரைகளையும் கர்த்தர் தந்திருக்கிறார். இந்த அழைப்பின் சொல் மொழியானது, பொதுவானதிலிருந்து, குடும்ப இணைப்பு களிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டதைக் காட்டும் விதமாக நகர்ந்தது. முதலில், அவனுடைய “தேசம்” என்பது ஆரானைச் சுற்றிலும் உள்ள மொத்த பூமியையும் உள்ளடக்கியதாக இருந்துள்ளது. இரண்டாவதாக, அவனது “உறவினர்கள்” என்பது, அவனைச் சார்ந்த பெரிய குழுவாக உள்ள இனத்தினர்களைக் குறிப்பிடுகின்றது. கடைசியாக, அவனுடைய “தகப்பனாரின் இல்லம்” என்பது தேராகுவினால் விரிவாக்கப்பட்டிருந்த குடும்பத்தைக் குறிக்கின்றதாயும், மேலும் ஆதியாகமம் 11:27-32 இல் குறிப்பிட்டுள்ளவர்களைக் குறிக்கிறது. அவனுடைய தேசம், உறவினர்கள் மற்றும் தகப்பனாரின் வீடு எல்லாவற்றையும் விட்டு விட்டு செல்லுதல் என்பது, அவனது குடும்பச் சொத்துகளையும் சேர்த்து, அவனுடைய பரம்பரைச் சொத்துரிமைகளையும் கைவிட்டு ஆபிரகாம் செல்ல வேண்டும் என்று பொருள்படுகிறது.

மிக முக்கியமாக “போ” என்ற பதம், ஒரு இயல்பான பிரதி பெயர் (לֶךְ-לְךָ, *lek-l*$^{e}$*ka*, லெக்-லெகா), என்பதைப் பயன்படுத்தி, வலியுறுத்தப்பட்டுள்ளதாய் இருப்பினும், இந்த மாதிரியான கூற்று உண்மையில் “நீ போகலாம்”[1] என்று பொருள்படுகிறது. கர்த்தர் தமது முதல் அழைப்பிலேயே, ஊர் என்ற இடத்தை விட்டு வரும் போதே, ஆபிரகாமை அவனது உறவினர்கள் எல்லோரையும் விட்டு வருமாறு கூறியிருந்தும், அனைவரும் எப்படியாயினும் அவனுடன் சேர்ந்து ஆரான் வரை வந்து விட்டதால், இது ஒரு நினைவூட்டுதலாக

ஆபிரகாமிற்கு அமைந்துள்ளது. இந்த கட்டளையானது இன்னும் துல்லியமாக மொழிபெயர்க்கப்பட்டால் “நீயாகப் போ” என்று இருந்திருக்க வேண்டும்.[2] இந்த விளக்கமானது, கர்த்தர் கோத்திரத்தலைவனை அவனுடைய இலக்கு வாக்குத்தத்த பூமி தான் என்று அறிவிக்க அவனைத் தயார்படுத்தியிருந்ததும், மேலும் அவனைப் “பெரிய ஜாதியாக்கி” அவன் மூலம் அவன் சந்ததியார் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (12:2, 7) என்பதும்தான்.

மேலும், குடும்ப அழுத்தங்களோ அல்லது இடர்பாடுகளோ இல்லாமல், ஆபிரகாம் அவனது உறவினர்களை விட்டு முற்றிலும் ஒருவாறு பிரிந்து வந்து, அவனது சொந்த அடையாளமாக அவன் ஒரு தேவனுடைய மனிதன் என்பதை நிலைநாட்டுமாறு, கர்த்தர் எதிர்பார்த்தவாறு இருந்தார் என்பது பொறுப்பான குறிப்பாயுள்ளது. ஆபிரகாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, விசுவாச வாழ்வில் கர்த்தரை விசுவாசித்து, அவரையே சாலையின் நிலப்படமாகவும் பாவித்து, மற்றும் வாக்குத்தத்த பூமியை அடையும் வரை, அவரையே பின்பற்றுவதுமாய் இருந்தால் தான், அவருடைய வாழ்வில் உள்ள தெய்வீக திட்டமானது நிறைவேற்றப்படும். “விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப் போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்” (எபி. 11:8) என்று எபிரெய நிருபத்தை ஆக்கியோன் குறிப்பிட்டுள்ளார்.

**வசனம் 2.** தெய்வீக அழைப்பை ஆறு பகுதியான வாக்குத்தத்தத்தின் மூலம் வலுவூட்டி, **நான் உன்னை பெரிய ஜாதியாக்கி** என்று ஆபிரகாமுடன் பேசத் துவங்கினார் (காண்க 18:18; 21:18; 46:3). இந்த வாக்குத்தத்தம் நம்புவதற்கு சற்று கடினமாக இருக்கலாம், ஏனென்றால் ஆபிரகாம் எழுபத்தைந்து வயதாய் இருந்தான் மற்றும் அவன் மனைவி அறுபத்தைந்து வயதான மலடியாய் இருந்தாள். அவளால் கர்ப்பவதியாகி ஒரு பிள்ளையைக் கூட பெற முடியவில்லை (11:30). இந்த அழைப்பிற்கு முக்கியமானது என்னவென்றால் “காணாததையும்” (தேசம்); “இன்னும் இல்லாததையும்” (சந்ததி) ஆபிரகாமிற்கு கர்த்தர் தருவேன் என்று வாக்களித்ததை விசுவாசிப்பதே (காண்க எபி. 11:1, 6-10; NJB).

ஆபிரகாமை “பெரிய ஜாதி” ஆக்குவேன் என்று தேவன் வாக்களித்த பின், கர்த்தர் ஒரு பொதுவான வாக்குத்தத்தத்தை கொடுக்கிறார்: **உன்னை ஆசீர்வதித்து** என்று. 2 மற்றும் 3ஆம் வசனங்களுக்குள் ஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தம் குறிப்பிடத் தக்கதாய் உள்ளது. ஐந்து முறைகள் இவ்வார்த்தை வினைச் சொல்லாக அல்லது பெயர்ச்சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆசீர்வதிப்பேன் (בָּרַךְ, *barak*, பாராக்) என்ற வினைச்சொல் பழைய ஏற்பாட்டின் மற்ற எந்த புத்தகத்தை காட்டிலும் ஆதியாகமத்தில் அதிக முறை

பயன்படுத்தப்பட்டுள்ளது. சூழ்நிலையைப் பொறுத்து கர்த்தர் தம் பிள்ளைகளை பல விதங்களில் ஆசீர்வதிக்கிறார்: பொருளாதார ஆசீர்வாதம், நிறைந்த வாழ்க்கை, நீடிய வாழ்க்கை, சமாதானம், நல்ல அறுவடை, பிள்ளைகளைப் பெற செழிப்பு, இன்னும் பல.

இரண்டாவது வாக்கியம் ஒரு பொதுவான ஆசீர்வாதமாக இருக்கையில். கர்த்தர் **உன் பேரை பெருமைப்படுத்துவேன்** என்றும் கூறுகிறார். பண்டைய கிழக்கு ஆசியாவில், அரசர்களின் கல்வெட்டுக்களில் மன்னர்களை புகழ்வதோ அல்லது இராஜாக்களுக்கு சிறந்த பெயரிடுவது வழக்கமானதாக இருந்தது. இதற்கு இனையான ஒன்று கர்த்தர் தாவீதிற்கு தந்த வாக்குத்தத்தமாகும்: "நீ இஸ்ரவேல் ஜனங்களுக்கு அதிபதி யாயிருக்கும்படி, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உனக்கு உண்டாக்கினேன்" (2 சாமு. 7:8, 9).

ஆபிரகாமின் "பெயரை பெருமைப்படுத்துவேன்" என்ற வாக்குத்தத்தம் அவன் பெயர் அநேக இடங்களுக்கு - குறிப்பாக தன்னை விசுவாசத்தின் தந்தையாக (ரோமர் 4:16) பார்க்கவிருக்கும் எதிர்கால சந்ததியினருக்கு தெரியவரும் என்பதற்கு சான்றாக நின்றது. பெயர் பெருமை என்பது, ஆதியாகமம் 6:4ல் தங்களது வன்முறைகளுக்காக அறியப்படும் "பேர்பெற்ற மனிதர்களாகிய" இராட்சதர்களுக்கு எதிராகவும், மற்றும் கோபுரத்தை கட்டி ஆதியாகமம் 11:4ல் தங்களுக்கு பெயர் உண்டு பண்ண நினைத்து, தேவனுக்கு விரோதமாய் செயல்பட்டவர்களுக்கும் எதிராகவும் இருக்கிறது. இந்த பெயரை ஆபிரகாம் பற்றிப்பிடித்தோ அல்லது தான் சொந்தமாக பெறப்போவதோ அல்ல. இது கர்த்தரின் ஈவாகும் மற்றும் ஆபிரகாமை வனையவும் அவனை பயன்படுத்தவும் அவரது தெய்வீக செயலாகும். அவன் "கனத்திற்குரிய பாத்திரமாகி" (2 தீமோ. 2:20, 21) இவ்வுலகிற்கான தெய்வீக திட்டத்தை நிறைவேற்ற முக்கிய பங்கை பெற்றிருப்பான்.

அடுத்த பகுதியான ***நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்*** என்பது பொதுவாக முந்தியதின் தொடர்ச்சியாகவே பார்க்கப்படுகிறது. இது பல வகைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிலர் ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்டிருந்த பெயர் எதிர்கால ஆசீர்வாதத்தில் குறிப்பிடப் படுமென்று கருதுகிறார்கள். சிலர், அவனது உதாரணங்களை பின்பற்றுவோர் அவனது பெயரை செழிப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் உதாரணமாக பயன்படுத்தப்படும் என்று கூறுகிறார்கள். மற்றொரு கருத்து என்னவென்றால், இது இவ்வுலகத்தின் எதிர்கால ஆசீர்வாதம் மட்டுமே, 3ஆம் வசனத்தின் பிற்பகுதியில் கூறுவதை முன்னமே கூறுவதாய் அமைந்துள்ளது.

இவை அனைத்து விளக்கங்களும் கூறாமல் விட்ட கூற்று என்னவென்றால், இங்கு எபிரெயன் ஒரு ஆண்பால் ஒருமையாக

குறிப்பிடப்பட்டு, ஆபிரகாமை "ஆசீர்வாதமாய் இருக்கச்" சொல்லி உந்துகோலாக அமைகிறது.[3] ஆகவே, இது ஆபிரகாம் பெற்றுக் கொள்ளவிருந்த ஆசீர்வாதமன்று, அல்லது ஆபிரகாமின் பெயரில் மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும் தேவன் கூறுவதில்லை. மேலும், இது ஆபிரகாமின் சந்ததி அவன் அனுபவித்த செழிப்பை குறித்து நினைவுபடுத்தி அதை தங்கள் வாழ்க்கையிலும் எதிர்பார்க்கும் தீர்க்கதரிசனம் அன்று. அது ஆபிரகாம் தன்னைச் சுற்றியிருப்பவர்களுக்கு "ஆசீர்வாதமாய்" இருக்க வேண்டும் என்ற அவனுக்கான ஒரு கட்டளையாகும். தேவன் ஒரு தனிப்பட்ட நபரையோ அல்லது ஒரு தேசத்தையோ ஆசீர்வதிக்கும் போது, கடைசியில் இத்தகைய வெகுமதிகளை கொடுக்கமாட்டார்; மற்றும் இத்தகைய வெகுமதிகள் உட்புறமாக எடுத்துக்கொள்ளக் கூடியவையல்ல. தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் தாங்கள் சந்திக்கும் அனைவருக்கும் "ஆசீர்வாதமாய்" இருக்கவேண்டும் என்பதை உணரவேண்டும் என்று விரும்புகிறார்.

**வசனம் 3.** கர்த்தர் வேறு மூன்று வாக்கியத்தோடு தொடர்கிறார், **உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்** என்பதாக துவங்குகிறது. இதே போன்ற வார்த்தைகள், பிற்காலத்தில் ஈசாக்கு யாக்கோபை, ஏசா என்று அறியாமல் ஆசீர்வதித்த போதும் (27:29) பயன்படுத்தப்பட்டுள்ளது. பிலேயாம் தீர்க்கதரிசியாலும் இவ்வார்த்தைகள் இஸ்ரவேல் தேசத்தை ஆசீர்வதித்தபோதும் பயன்படுத்தப்பட்டு உள்ளது (எண். 24:9). பின்வரும் இரண்டிலும், ஆசீர்வாதம் தனி நபருக்கு கூறப்படவில்லை, "உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள்" மற்றும் "உன்னை ஆசீர்வதிக்கும் அனைவரையும் ஆசீர்வதிப்பேன்" என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு எதிரிடையாக கர்த்தர் ஆபிரகாமை "நான் ஆசீர்வதிப்பேன்" என்று முதலாம் ஆசீர்வாதத்தில் நபராக வைக்கிறார். இந்த வார்த்தைகள் தேவன் ஆபிரகாமுடன் எவ்வளவு நெருக்கமாய் இருந்தார் என்பதையும், அவன் மீது தேவன் கொண்டுள்ள பற்றையும் விவரிக்கிறது. ஒருவன் ஆபிரகாமோடு நல்லுறவு கொண்டிருந்தால், அவர்களை தேவன் ஆசீர்வதிப்பார்.

பின், கர்த்தர், **உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன்** என்று கூறுகிறார். முந்தியதிற்கு எதிராக, ஆபிரகாமை சபிக்கிறவர்களை தேவன் சபிப்பார். காரணம், உலகிற்கு ஆசீர்வாதத்தை கொடுக்க தேவன் பயன்படுத்திய பாத்திரமாகிய ஆபிரகாமோடு அவர்கள் நல்ல உறவை வைத்திருக்கமாட்டார்கள். விரோதிகள் ஆபிரகாமை பல விதங்களில் சபிக்கக்கூடும்: அவனைக் குறித்து தீயதை பேசுவது, அவன் பெயரைக் கெடுப்பது, அவனை தாக்குவது, அல்லது அவனுக்கு உரியதை (உரியவரை) எடுத்துக்கொள்வது போன்று. உதாரணமாக, பார்வோன் ஆபிரகாமோடு நல்லுறவில் இல்லை, ஏனென்றால் அவன்

ஆபிரகாமின் மனைவியை எடுத்துக்கொண்டு தன் அரமனைக்கு கூட்டிச் சென்றான் (12:10-17). இதை, அவளுக்கு திருமணம் ஆகி இருந்ததை அறியாமல் செய்திருந்தாலும், பார்வோன் தேவ சாபத்தை (நோய் மற்றும் "வாதை") தன் குடும்பத்தின் மேல் வரப்பண்ணினான்.

பின் தேவன் ஆசீர்வாதத்தின் கடைசிப் பகுதியை கூறினார். அது உயர்ந்த ஸ்தானமாகவும் ஆபிரகாமின் அழைப்பில் முக்கியம் நிறைந்ததாகவும் அமைந்தது: **பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீவதிக்கப்பட்டிருக்கும்.** 2ஆம் வசனத்தில் தேவன் ஆபிரகாமை ஆசீர்வாதமாய் இருக்கும்படி அறிவுறுத்துகிறார், இப்போது அந்த கட்டளையை விரிவுபடுத்துகிறார். ஆபிரகாம் தன் குடும்பம், நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர்களையும் தாண்டி பலருக்கு ஆசீர்வாத வாய்க்காலாய் இருக்க வேண்டியதிருந்தது. உண்மையில், முற்றான வாக்குத்தத்தம் அடிப்படையில் திகைப் பூட்டப்படக் கூடியதாய் இருந்தது, ஏனென்றால் எல்லா குடும்பங்களும் உலக மக்களும், 4 லிலிருந்து 11 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள கேடு நினைக்கும் மக்களும் அதற்கு பின் வருபவர்களும் இந்த ஆசீர்வாதத்தினால் நன்மை பெருகுவார்கள். தேவன் தன் வாக்கை ஆபிரகாமிற்கு பல ஆண்டுகள் கழித்து வலியுறுத்தினார் (22:18), பின் ஈசாக்கிற்கும் (26:4), கடைசியாக தன் 12 மகன்களால் இஸ்ரவேல் தேசத்தை உருவாக்கும் யாக்கோபிற்கும் (28:14) வாக்களித்தார். ஆபிரகாமுக்கான திட்டமிடப்பட்டதன் தேவனின் நோக்கம் கானானின் செழிப்பான நிலத்தையும் கடந்து, அதில் வாழப்போகும் அவனுடைய சந்ததியின் செழிப்பிற்குரியதாய் இருந்தது. ஆபிரகாம் தன் மக்களின் மூதாதையராய் இருந்து, அவன் மூலம் தெய்வீக ஆசீர்வாதங்கள் கடந்து போகும், முடிவில் வாக்களிக்கப்பட்ட விதையாய் (சந்ததியாய்) இயேசு கிறிஸ்து "உலக இரட்சகராய்" வருவதில் முடியும் (யோவான் 4:42; அப். 3:25; கலா. 3:8; 1 தீமோ. 2:3-6).

## தேவ அழைப்பிற்கு ஆபிரகாமின் மறுமொழி (12:4-9)

**4கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான். ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான். 5ஆபிராம் தன் மனைவியாகிய சாராயையும், தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்தையும், தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் கூட்டிக்கொண்டு, அவர்கள் கானான் தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், கானான் தேசத்தில் சேர்ந்தார்கள்.**
**6ஆபிராம் அந்தத் தேசத்தில் சுற்றித் திரிந்து சீகேம் என்னும் இடத்துக்குச் சமீபமான மோரே என்னும் சமபூமிமட்டும் வந்தான்; அக்காலத்திலே**

**கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள். [7]கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான். [8]பின்பு அவன் அவ்விடம்விட்டுப்பெயர்ந்து, பெத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய், பெத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயீ கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான். [9]அதின்பின் ஆபிராம் புறப்பட்டு, தெற்கே பிரயாணம் பண்ணிக்கொண்டு போனான்.**

**வசனங்கள் 4, 5.** பல வருடங்களுக்கு பின் **ஆரானில்**, ஆபிரகாமின் தந்தையாகிய தேராகு மரித்தார் (11:32). **கர்த்தர் தன்னிடம் பேசியது போல, ஆபிரகாம், விசுவாசத்தினால் முன்னேறினான்** (காண்க அப். 7:4). **கானானுக்கு போகும்படி** இந்த அழைப்பு ஆபிரகாமுக்கு வந்து போது **அவன் எழுபத்தைந்து வயதாய் இருந்தான்**, ஆனாலும் சாராயின் மலட்டுத்தன்மையினால் அவன் குழந்தையில்லாதிருந்தான். அவன் தன் விசுவாசத்தினால் மீண்டுமாக சோதிக்கப்பட்டான். தன் குடும்பத்தை விட்டுச்செல்ல மனதில்லாமல், **தன் சகோதரனின் மகனாகிய லோத்தை** தன்னோடு கூட்டிக்கொண்டு சென்றான். ஒருவேளை, சாராள் மலடாய் இருப்பதினால் அவனைத் தத்தெடுக்கும் நோக்கமாய் இருக்கலாம். ஆனால் எழுதியவர் ஆபிரகாமின் நோக்கத்தைக் கூறவில்லை.

**அவர்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பாத்தியம் எல்லவற்றையும் … சவதரித்த ஜனங்களையும்** கூட்டிக்கொண்டு ஆபிரகாமும் லோத்தும் கானானுக்கு நீண்ட பயனத்தை துவங்கினார்கள். எபிரெய ஆக்கியோன் கூறுகையில், “தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்” (எபி. 11:8) என்று எழுதுகிறார். அவன் அறிந்ததெல்லாம் கானான் மிக தொலைவிலுள்ள தேசம் என்பதே (ஆரானுக்கு தென்மேற்கில் 400 மைல் தொலைவில் உள்ளது), மற்றும் அவனுக்கும் அவனோடு இருந்தவர்களுக்கும் இந்த பயணம் எளிமையாக இருக்காது என்று அறிந்திருந்தான். ஆபிரகாமிற்கும் லோத்திற்கும் அநேக வேலைக்காரர்கள் (அல்லது அடிமைகள்[4]) தங்கள் மந்தையையும் கால்நடைகளையும் பாதுகாக்க இருந்தார்களென்று தெளிவாக தெரிகிறது; மட்டுமல்லாது, இவ்வேலையாட்கள் தேவையான நேரங்களில் யுத்த புருஷர்களாகவும் இருந்தார்கள்.[5]

எனினும், நீர் நிறைந்த ஐப்பிராத்து நதியின் பகுதியை விட்டு மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் கொள்ளைக்காரர்கள் நிறைந்த பகுதிகள் வழியாக நீண்ட தூர பயணத்தை செய்ய எடுத்த முடிவு சுலபமானது இல்லை. பெரும்பாலும் அவர்கள் ஆரானிலிருந்து மேற்கே கர்கெமீஷப்ற்குச் சென்று, தெற்கே அலிப்போ வழியாக தெற்கே தமஸ்குவிற்கான[6] பிரதான வழியை அடைந்து கானானை அடைந்திருப்பார்கள். இருப்பினும், இப்பயணம் கடினமானதே,

ஏனென்றால், அவர்கள் பிரயாணம் செய்த பகுதிகளில் சிலவை தங்கள் ஆரானுக்கு அருகில் பாலி நதியில் இருந்த தங்கள் வீட்டைப் போல செழிப்பானதாக இல்லை. அவர்கள் தாங்கள் போய் சேர வேண்டிய இடத்தை அடைந்த போது பாசானில் (இன்று கோலான் உயரங்கள் என்று அறியப்படுகிறது) இருந்து மேற்கே யோர்தான் நதி வழியாக கானானுக்குள் சென்றார்கள்.

**வசனம் 6.** தெற்கே பயணத்தை தொடர்ந்து, **ஆபிராம் அந்த தேசத்திலே** [சீகேம்] **சுற்றித்திரிந்தான்.** அந்த நகரம் கானான் தேசத்தின் மத்தியில் எபால் மற்றும் கெரிசீம்[7] ஆகிய இரு மலைகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. இந்த இடம் ஆபிரகாமிற்கும் பின் வந்த இஸ்ரவேல் மக்கள் அனைவருக்கும் மிக முக்கியமானதாய் இருந்தது, வேதத்தில் பல முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது (33:18; 35:4; 37:12, 13; யோசுவா 24:1; நியா. 9:6; 1 இராஜா. 12:1).

சீகேமிலே, ஆபிரகாம் **மோரே என்னும் சமபூமி** மட்டும் வந்தான். அவ்விடம் அப்பகுதியில் அதிக கர்வாலி மரங்களை உடைய முக்கியமான இடமாக இருந்திருக்கும்.[8] பிற்காலத்தில் இந்த இடத்தில் தான் யாக்கோபு அவன் வீட்டாரின் விக்கிரகங்களை புதைத்தான் (35:4), இங்கே தான் யோசுவா கல்லை நட்டான் (யோசுவா 24:25, 26), மற்றும் அபிமலேக்கு சக்கேமின் இராஜா வாக்கப்பட்டதும் இவ்விடத்திலேயே (நியா. 9:6).

அடுத்த வாக்கியம் **கானானியர்கள் அங்கு இருந்தார்களென்று** ஏற்றுக்கொள்கிறது. இது, ஆபிரகாமிற்கும் அவன் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று வாக்குப்பண்ணின தேசத்தை கானானியர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள் என்பது எழுத்தாளரின் கவனிப்பாக இருக்கலாம். ஆகவே, இப்பகுதி, ஆபிராம் ஏன் துரிதமாக அந்த இடத்தை கைப்பற்றவில்லை என்று விளக்குகிறது. வேறு விதமாக பார்த்தால், இது ஒரு வேளை ஆதியாகமத்தை வாசிப்பவர்களுக்கு, ஆபிரகாம் கானானை அடைந்த போது, கானானியர் நிலத்தை ஆக்கிரமிப்பதில் முக்கியத்துவமாய் இருந்தார்கள் என்று கூறும் தொகுப்பாகவும் இருக்கலாம். இந்த காரியத்தில், இத்தொகுப்பு, மோசேக்கு பின்னும், வாக்களிக்கப்பட்ட தேசத்தின் பெரும் அச்சுறுத்தலாக இருந்த கானானியர்கள் முறியடிக்கப்பட்டு பல காலத்திற்குப் பின்னும், பரிசுத்த ஆவியானவரின் உதவியால் எழுதப்பட்டது. இவ்வாக்கியத்தின் துல்லியமான அர்த்தத்தையும், அல்லது ஆபிரகாம் வாக்களிக்கப்பட்ட தேசத்தை அடையும் முன் பட்ட விசுவாச போராட்டத்தையும் மீறி, கானானியர்கள் அத்தேசத்தை ஆக்கிரமித்து இருந்த சமயத்திலும், ஆபிரகாம் தன் விசுவாசத்தில் உறுதியாய் இருந்தான்.

**வசனம் 7. கர்த்தர் ஆபிராமிற்கு இக்கட்டான சூழ்நிலையில் தரிசனமானார்.** ஊர்ல் பெற்ற முதல் தரிசனத்தைப் பற்றி ஸ்தேவான்

கூறினாலும் (அப். 7:2), ஆதியாகமத்தின்படி, ஆபிரகாம் தேவ தரிசனம் பெற்றது இதுவே முதல் முறை (காண்க 15:17; 17:1; 18:1).[9] எந்த விதமாய் இது இருந்தது என்று தெளிவற்றதாய் இருந்தாலும், இந்த புதிய இடத்தில் கர்த்தருடைய பிரசன்னம் ஆபிரகாமிற்கு அளித்தது.

ஆபிரகாமிற்கு அந்த வேளையில் குழந்தை இல்லாத போதும் **உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்**, என்று யாவே வாக்களித்தார். “சந்ததி” என்ற வார்த்தைக்கான எபிரெய பதம் (זֶרַע, *zera'*, செரா), இதற்கு “விதை” என்று அர்த்தம். இது பன்மையில் “விதைகள்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வசனத்தில், ஆபிரகாமின் “விதை” என்று குறிப்பிடப்படுவது அவனில் இருந்து வரப் போகிறவர்களையும் பின் வாக்களிக்கப்பட்ட தேசத்தை சுதந்தரிக்கப் போகும் இஸ்ரவேலர்களையே என்பது தெளிவாகிறது, மற்றும் அவ்வார்த்தை ஆதியாகமம் முழுவதிலும் வருகிறது.[10]

ஆபிரகாம் பெற்ற தரிசனத்திற்கும் வாக்குத்தத்தத்திற்கும் அவனது மறுமொழி என்னவென்றால், முதலில் அவன்; **அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை கட்டினான்.**[11] மெசெப்பொத் தோமியாவில் இருந்து ஆரான் மட்டும் பின் கானானிற்கு பாதுகாப்பாய் வழிநடத்திய யாவேக்கு தன் நன்றியையும் துதியையும் செலுத்தினான். சிலர் இந்த பலிபீட அர்ப்பணிப்பின் ஆராதனையை மறுக்கிறார்கள், வேறு எந்த நோக்கமும் சந்தேகமானதே. பலி மிருகத்தை குறிப்பிடாமல் ஆபிரகாம் பலிபீடம் கட்டுவதற்கு இதுவே முதல் ஆதாரமான குறிப்பு என்பதால், இது தன் சந்ததி வாக்களிக்கப்பட்ட அத்தேசத்தை சுதந்தரிப்பார்கள் என்ற ஆபிரகாமின் விசுவாச அடையாளமாவே இருக்கிறது. எனினும், ஆதியாகமத்தின் துவக்கத்தில் இருந்து கர்த்தருக்கு பலி செலுத்துவதை நாம் வாசிக்கிறோம். ஆபேல் கர்த்தருக்கு மிருகங்களை கொடுத்தான் (4:4), பிரளயத்திற்கு பின் நோவாவும் அதையே செய்தான் (8:20), பின் ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கிற்கு பதிலாக ஒரு ஆட்டை பலி செலுத்தினான் (22:13). பிற் காலத்தில் ஆசாரியர்களே இத்தகைய பலியை உருவாக்கினார்கள், அதையே நாம் ஆபிரகாமின் கதைகளில் வாசிக்கிறோம், என்ற இத்தகைய நம்பிக்கை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பொது விளக்க ஆவணத்தின் வரட்டுத்தனமான முற்கோளை சுமந்து வருகிறது.

சிலர், இந்த தரிசனத்திற்கு பிறகே ஆபிரகாம், யாவே மற்ற தெய்வங்களில் ஒரு தெய்வம் இல்லாமல், மற்ற தெய்வங்களைவிட இவரே சிறந்த தேவன் என்று அறிந்துகொண்டான் என்றும் கூறுகிறார்கள். இவை அனைத்தையும் மீறி, பண்டைய கால மக்கள், அவர்களின் தெய்வங்களின் வல்லமைகள் மெசெப்பெத் தோமியா அல்லது கானானின் தீர்மானிக்கப்பட்ட பூகோள பகுதிகளுக்கு மட்டும் என்று வரையறுக்கப்பட்டிருந்ததாக நம்பினார்கள்; என்றாலும் ஆபிரகாம், தன்னையும் தன் வேலைக் காரர்களையும், எல்லா

உடைமைகளையும் காக்க யாவே வல்லவராய் இருக்கிறார் என்று முன்பே விசுவாசியாமல் ஊரிலிருந்து தன் வீட்டை விட்டும், பின் ஆரானை விட்டும் வந்திருக்கமாட்டான்.

ஊரை விட்டு வர கூறுவதற்கு முன், ஆபிரகாமும் அவன் குடும்பமும் வேறே தேவர்களை வணங்கினார்க்கள் என்று நாம் அறிவோம் (யோசுவா 24:2, 3), ஆனால் அவனுக்கு தான் வணங்கின தெய்வங்களை விட்டு கர்த்தரே அகில உலகத்திற்கும் ஒரே தேவனென்று அறிய எவ்வளவு காலம் ஆனது என்று கூறப்படவில்லை. குறிப்பாக கூறினால், அவனுக்கு கர்த்தரே. "சர்வ வல்லமையுள்ள தேவன்" என்பதை அவன் பற்றிக்கொள்ள அவனுக்கு பல காலங்கள் ஆயிற்று என்று வேத வசனத்தின் மூலமாகவே நாம் அறிகிறோம் (17:1), தவிர மற்ற எந்த காரியங்களும் "அவருக்கு கடினமானதாக" இருக்கவில்லை (18:14). மற்றொரு பக்கம், எபிரெயர் 11:8 கூறுகிறது, "விசுவாசத்தினாலே ஆபிரகாம்" தன் வீட்டை விட்டு "சுதந்திரமாக பெறப்போகிற" தேசத்திற்கு சென்றான். விசுவாசம் என்பது தேவனை "அவர் உண்டென்று" நம்புவது மட்டும் இல்லாமல், "தம்மை தேடுகிறவர்களுக்கு அவர் பலன் அளிக்கிறார்" (எபி. 11:6) என்று நம்புவதுமாகும். ஆகவேதான் ஆபிரகாமிற்கு தேவன் தான் அளித்த வாக்கைக் காப்பாற்ற ஆற்றலும் உண்மையுள்ளவருமாய் இருக்கிறார் என்ற நம்பிக்கை இருந்தது.

**வசனம் 8.** சீகேமிலிருந்து பெயர்ந்து ஆபிரகாம், **பெத்தேலுக்கும்** ஆயீக்கும் நடுவில் **கூடாரமிட்டான்**, பெத்தேல் பொதுவாக பெய்டின் என்று அழைக்கப்படுகிறது. இது எருசலேமிற்கு வடக்கே ஏறக்குறைய 10 மைல் தூரமும், மற்றும் ஆயீ எட்-டெல் (பெய்டினிற்கு 2 மைல் தூரம் தென் கிழக்கே) என்று கருதப் படுகிறது, என்றாலும் இதை பலர் வாதிடுகிறார்கள்.[12] பெத்தேலின் உண்மையான பெயர் "லூஸ்" (28:19), ஆனால், எழுத்தாளர் இதன் மாற்றத்திற்கு முன்னமே இதற்கு புதிய பெயரை இடுகிறார்.

ஆபிரகாம் கூடாரம் அமைத்தவுடன், **கர்த்தருக்கு பலிபீடத்தை கட்டினான்.** இதின் காரியம் என்னவென்றால், அவன் எங்கெல்லாம் சென்றாலும் கானானியருடைய பலிபீடத்தை பயன்படுத்தவில்லை. அவன் தன் பலிபீடத்தை தானே கட்டினான். வசனம் இவ்விதமாய் கூறுகிறது, ஆபிரகாம் **கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டான்** என்று (ஆகிய விளக்கங்களை காண்க 4:26). கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டான் என்பது, அவன் பழங்கால அஞ்ஞான உலகில் அந்நிலத்தையும் தெய்வங்களையும் பிரிக்க முடியாது என்ற பொதுவான மனப்பாங்கை அவன் நிராகரித்தான் என்பதை அழுத்தமாக கூறுகிறது. மட்டுமின்றி இக்காரியம் எதை காட்டுகின்றதென்றால், கானானை தன் சந்ததிக்கு வாக்களித்த யாவே மட்டுமே கானானின் தேவன் என்று கூறுவதை காட்டுகிறது.

**வசனம் 9.** ஆபிரகாம் வடக்கிலிருந்து தெற்கே **நேகேவிற்கு புறப்பட்டான்.** நேகேவ் வாக்களிக்கப்பட்ட தேசத்தின் தெற்கில் பெரிய நிலப்பரப்பாய் இருந்தது. அது யூதாவின் குன்றுகள் துவங்கி பெயெர்செபா அருகில் காதேஸ்பார்னியா வரை நீண்டு இருந்தது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்ரவேலர்கள் காதேஸிலே தான் கூடாரம் அமைத்து, 12 கோத்திரங்களிலிருந்து ஒரு கோத்திரத்திற்கு ஒரு மனிதன் வீதம் கானானை வேவுபார்க்கச் சென்றார்கள் (எண். 13:1-26). அந்த இடம் குறைந்த மக்கள் தொகையை கொண்டது, ஏனென்றால், அங்கு விவசாயத்திற்கு தேவையான மழை இருக்காது, சராசரியாக வருடத்திற்கு 8 அங்குலம் மட்டுமே மழை பெய்யும். ஆனால் வசந்த காலத்தில் அங்கிருந்த ஈரப்பதமே கால்நடைகளுக்கும் ஆடுமாடுகளுக்கும் புல் வளர போதுமானதாய் இருந்தது.

## எகிப்தில் ஆபிரகாமும் சாராளும் (12:10-20)

12:1-9 ஆகிய வசனங்களுக்கும் 12:10-20 ஆகிய வசனங்களுக்கும் இடைப்பட்ட காலம் எவ்வளவு என்று நமக்குத் தெரியாது. கானானின் தெற்கு பகுதியில் தொடர்ச்சியான மழை இருக்கவில்லை, நிச்சயமாக மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உயிர் வாழ அது தேவையாய் இருந்தது. ஆபிரகாமையும் அவன் சம்பத்துக்களையும் மழை பெய்ய தவறியதால் இடறலுக்குட்படுத்த பல மாதங்கள், ஒருவேளை வருடங்களும் ஆகி இருக்கலாம்; ஆனால் வாழ்வா சாவா என்ற நிலை வந்த போது அவர்கள் கானானை விட்டுச் செல்ல வேண்டியதாய் இருந்தது.

### எகிப்தில் ஆபிரகாமின் சூழ்ச்சி (12:10-16)

**10அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், ஆபிராம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான். 11அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது, தன் மனைவி சாராயைப் பார்த்து: நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன். 12எகிப்தியர் உன்னைக் காணும்போது, இவள் அவனுடைய மனைவி என்று சொல்லி, என்னைக் கொன்றுபோட்டு, உன்னை உயிரோடே வைப்பார்கள். 13ஆகையால், உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும், நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான். 14ஆபிராம் எகிப்திலே வந்தபோது, எகிப்தியர் அந்த ஸ்திரீயை மிகுந்த அழகுள்ளவளென்று கண்டார்கள். 15பார்வோனுடைய பிரபுக்களும் அவளைக்கண்டு, பார்வோனுக்கு முன்பாக அவளைப் புகழ்ந்தார்கள். அப்பொழுது அந்த ஸ்திரீ பார்வோனுடைய அரமனைக்குக் கொண்டு போகப்பட்டாள். 16அவள் நிமித்தம் அவன் ஆபிராமுக்குத்**

**தயைபாராட்டினான்; அவனுக்கு ஆடுமாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களும் கிடைத்தது.**

**வசனம் 10. பஞ்சத்தின்** காரணமாக, ஆபிரகாம் அவ்விடத்தை விட்டு **எகிப்திற்கு சென்றான்.** இந்த இடப்பெயர்ப்பிற்கு காரணம் மீண்டும் கூறப்பட்டுள்ளது: கானானில் **பஞ்சம் கொடியதாய்** இருந்ததால் ஆபிரகாமின் சம்பத்துகளுக்கு உயிர்வாழ தேவையானவற்றை வழங்க முடியாமல் இருந்தது (காண்க 26:1; 41:54, 56; 43:1).[13]

எகிப்தில் அநேக உணவு இருப்பதாக ஆபிரகாம் கேள்விப் பட்டிருக்க வேண்டும். அத்தேசமும் மிக குறைந்த மழையையே பெற்றிருந்தது, ஆனால் அதின் செழிப்பு மத்திய ஆப்பிரிக்கா தேசத்திலிருந்து வந்தது. அங்கு நைல் நதியின் வெள்ளம் எகிப்தில் செழுமையான மணலை உருவாக்கியது. பின் நைல் நதியின் வெள்ளம் காய்ந்தவுடன், ஈரமான மணல் நிறைய தானியங்களை வழங்கியது. அநேகர் எகிப்தை மத்தியதரைப் பகுதியின் உலகை அப்பக் கூடையாகக் கண்டார்கள். அநேக இடங்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடியதாய் இருந்தது, இதன் விளைவாக வறட்சியை கண்டது.

இந்த நன்மைகளையும் தாண்டி, ஆபிரகாம் சில வதந்திகளையும் கேள்விப்பட்டிருந்தான். எகிப்தியர்கள் அழகான மனைவியை உடைய விருந்தினர்களை கொன்று அவர்களது மனைவியை அடைய முயற்சிப்பார்களென்று. இத்தகைய இடத்தில் ஆபிரகாம் இருக்க விரும்பவில்லை. “தங்கும்படி” (גּוּר, *gur*, கர்) என்றால் அந்நியனாய் இருக்கவே என்று அர்த்தம். ஆபிரகாமும் சாராளும் எகிப்தில் தற்காலிகமாகவே தங்கினார்கள், வேறு இரத்த சம்பந்தமோ அல்லது குடிமகனுக்கான பாதுகாப்போ அவர்களுக்கு இல்லை. இந்த சூழ்நிலை ஆபிரகாமை சற்று நிதானித்து எவ்வழியில் செல்ல வேண்டும் என்று தேவனின் வழிநடத்துதலை நாட வழிவகுத்தது. முதலாவது, கர்த்தர் வழிநடத்திய தேசத்திலே பஞ்சத்தின் மத்தியிலும் இருப்பது, அல்லது, இரண்டாவதாக கானானை விட்டு எகிப்திற்கு செல்வது. இவ்விரண்டுமே ஆபத்தானதும் மரணத்திற்கு காரணமாயும் அமையலாம். மீண்டுமாய் ஆபிரகாம் விசுவாசத்தில் சோதிக்கப்படுகிறான், அவன் இக்காரியத்தை தேவனிடம் கொண்டு சென்றதிற்கான எந்த அறிகுறிகளையும் நாம் காணமுடியவில்லை. கர்த்தர், அவன் சந்ததிக்கு வாக்குப்பண்ணின தேசத்தை விட்டு (12:7) எகிப்திற்குச் சென்று ஏமாற்றுவதை உயிர்வாழும் உக்தியாக பயன்படுத்த அவனாகவே தனக்குள் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும்.

**வசனங்கள் 11, 12.** அவனும் அவன் துணையும் **எகிப்திற்கு சமீபமாய் வந்தபோது**, ஆபிரகாம் **தன் மனைவியாகிய சாராய் அழகுள்ளவளாய்**

**இருந்தபடியால்**, எகிப்தியர்களால் கவனிக்கப் படுவாய் என்று எச்சரித்தான். அவர்கள் அவளை கண்டு தன் மனைவி என்று கருதுவார்கள் என்றான். மற்றும், **என்னை கொன்று உன்னை உயிரோடே வைப்பார்கள்** என்றான். இவ்வாறு குடியேறுபவர்கள் பண்டைய காலத்திலிருந்தே இத்தகைய ஆபத்தில் இருப்பதை கட்டாயம் அறிந்திருந்தான். தங்கள் சொந்த இடத்தில் இருக்கும் பாதுகாப்பையும் ஆதரிப்பையும் அவர்கள் இழந்தார்கள். எகிப்தியர்கள் கணவனைக் கொன்று மனைவியை அடைவார்கள் என்று அவன் அறிந்திருந்ததைத் தவிர, அவன் ஏன் கானானில் பாதுகாப்பாயும் எகிப்தில் அச்சுறுத்தலாயும் உணர்ந்தான் என்பது தெளிவாகவில்லை. கூடுதலாக, ஆபிரகாம், பார்வோனும் மற்ற நிர்வாகிகளுமே இத்தகைய காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்று அறியவில்லை. அவன் ஒருவேளை, அரசு அதிகாரிகள் இத்தகைய பெரிய கொடூரங்களைப் பார்த்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாக எண்ணி இருக்கலாம்.

சாராளி அழகைக் குறித்து அநேக கேள்விகள் எழுப்பப் படுகிறது. அறுபத்தைந்து வயது[14] நிறைந்த ஒரு பெண்ணை அடைய கொலையும் செய்ய எப்படி கருதுவார்களென்று. அதற்கு பல விளக்கங்கள் கொடுக்கப்படுகிறது. அதில் மிக முக்கியமான பதிலாக கருதப்படுகிறது எதுவென்றால், அக்காலத்தில் மக்கள் அநேக நாட்கள் உயிர் வாழ்பவர்களாய் இருந்தார்களென்றும், இன்றைய காலத்தை விட மிக மெதுவாகவே வயதடைந்தார்கள் என்பதாகும். சாராள் 127 வயது வரை வாழ்ந்ததால் (23:1), அவளும் ஆபிரகாமும் எகிப்திற்கு சென்றபோது சாராள் நடுத்தர வயதாய் இருந்தாள்.

**வசனம் 13.** ஆபிரகாம் சாராளிடம் தாங்கள் இருவரும் சகோதரன் மற்றும் **சகோதரி** என்று **கூற** ஒப்புக்கொள்ளும்படி கூறுகிறான், ஆகவே அவனுக்கு நன்மை உண்டாகும் பொருட்டும், அவன் **பிழைத்திருக்கவும்** அப்படி சொல்லச் சொன்னான். சாராள் நிச்சயமாக ஆபிரகாமின் மனைவி தான், எனினும் அவள் அவனுக்கு சகோதரி முறையுமாகும். காரணம், இருவருக்கும் ஒரே தகப்பனும் (தேராகு) வெவ்வேறு தாயும் இருந்தார்கள் (20:12). இங்கே மீண்டுமாய் ஆபிரகாம் தன் விசுவாசத்தில் குறைவுபெற்று தன் மனைவியின் பாதுகாப்பை விட தன்னுடைய பாதுகாப்பிலேயே அக்கறை கொண்டான். அதுவே அவர்கள் இருவருக்கும் இடையே இருக்கும் உறவை மறைக்க காரணம் ஆகும். தன் மனைவி வேறொருவனோடு சேரவும், பலாத்காரம் பண்ணப்படுவாள் என்ற எண்ணம் சற்றும் அவனுக்கு இல்லாதிருந்தது. மேலும் அவன் தன் மனைவியின் விசுவாசமும் ஆவிக்குரிய வாழ்க்கையும் அவனது வஞ்சனையினால் கெட்டுப்போகும் என்ற கருசனையும் இல்லாதிருந்தான். மட்டுமல்லாது, வேறு தேசத்திலே அவனை பாதுகாக்க தேவனிடம் கேட்டதாகவும் தெரியவில்லை.

சாராளிற்கான அவனது கருசனை எல்லாம் சகோதரன் தன் சகோதரிக்கு காட்டுவது என்று நிச்சயமாக தன் இருதயத்தில் தீர்மானம் செய்து கொண்டான்.

தான் சாராளின் சகோதரன் என்று கூறுவதை பலர் மட்டுப்படுத்துகிறார்கள். இத்தகைய செயலை அவன் செய்திருக்க அவசியமும் இல்லை. ஒரு வேளை, பஞ்ச காலம் வரை அங்கே தங்கி இருந்து பின் மீண்டும் கானானுக்கு செல்லுவது அவன் நோக்கமாய் இருந்திருக்க வேண்டும். எனினும், ஆபிரகாமின் செயலை விளக்க வேதத்தில் விளக்கங்கள் இல்லை. இந்த வார்த்தைகள் தெளிவாய் கூறுகிறது என்னவென்றால், ஆபிரகாம் கோழைத்தனமாய் நடந்து தன் மனைவியை தங்கள் உறவைக்குறித்து பொய் சொல்ல சம்மதிக்க வைத்து தன்னை காப்பாற்றிக்கொள்ள நினைத்தானென்று.

**வசனங்கள் 14, 15.** ஆபிரகாம் **எகிப்தை** பயத்தோடு அடைந்தான், **எகிப்தியர்கள் அந்த ஸ்திரீயை மிகுந்த அழகுள்ளவளென்று கண்டார்கள். பார்வோனுடைய பிரபுக்களும்**[15] அவள் அழகைக் கண்டு, பார்வோனுக்கு முன் அவளைப் புகழ்ந்தார்கள், இதன் விளைவாக அவள் **பார்வோனுடைய அரமனைக்கு கொண்டுபோகப்பட்டாள்.** வேதத்தில் ஆபிரகாமின் வேண்டுதலுக்கு சாராளின் மறுமொழி கொடுக்கப்படவில்லை. இந்த பொய் திட்டத்திற்கு அவள் எவ்வாறு உணர்ந்தாள்? அவள் அதை ஏற்றுக்கொண்டு பிரபுக்களோடு ஒத்துழைத்து இராஜாவை பார்க்க சென்றாளா? அவளது மௌனம் அவள் தன் கனவனை காப்பாற்ற அவனது சூழ்ச்சிக்கு சம்மதித்து இருந்ததாக தெரிகிறது, ஏனென்றால் இந்த சூழ்நிலையில் அவளுக்கு வேறு என்ன செய்வது என்று தெரியவில்லை. சந்தேகமின்றி அவள் தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி கட்டாயப்படுத்தும் முன் அறியாதவர்களிடம் பயத்தை அனுபவித்திருப்பாளென்று தெரிகிறது.

**வசனம் 16.** இதற்கிடையில், ஆபிரகாமிற்கு பார்வோன் **ஆடுமாடுகளும், கழுதைகளும், வேலைக்காரர்களும், வேலைக் காரிகளும்** [அல்லது அடிமைகள்], **கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களையும்** கொடுத்தான். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மிருகங்களும் வேலைக்காரர்களும் செல்வந்தர்களை குறிப்பதாகும். குறிப்பாக ஆபிரகாமின் காலத்தில் (காண்க 20:14; யோபு 1:3). வரலாற்றின் ஆரம்ப காலத்தில் செல்வந்தர்களைக் குறிக்க பணமோ அல்லது முதலீடோ அல்ல, விலங்குகளே நிர்ணயம் செய்தது. அதாவது செல்வம், விலங்குகள் மற்றும் அடிமைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இதன் அடிப்படையில் ஆபிரகாம் மிக செல்வந்தன் ஆனான். லோத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும் அவன் ஆபிரகாமோடு இருந்ததினால் அவனும் செல்வந் தனாயிருப்பான் (காண்க 13:1). அடுத்த அதிகாரத்தில் இருவருக்கும் மந்தை பெருகி இருந்தது, ஆகவே இருவரின் மந்தை மேய்ப்பருக்கும்

மந்தையை புல் மேய்க்க வாக்குவாதம் வந்தது. ஆபிரகாமின் மந்தையும் வேலைக்காரரும் பஞ்ச காலத்தில் கானானிலே உயிர்வாழ முடியாமல் இருந்தால், லோத்தின் மந்தையும் வேலையாட்களும் எப்படி வாழ்ந்து பெருகி இருப்பார்கள்?[17]

"ஒட்டகங்கள்" பார்வோனின் பரிசுகளின் ஒரு பாகமாக கூறப்படுவது அக்காலத்திற்கு முறண்பாடாக சிலர் கருதுகிறார்கள். ஏனென்றால், இத்தகைய மிருகங்கள் பழங்காலத்தில் பெரும்பாலும் பயன்படுத்தப்படவில்லை. கி.மு. இரண்டாவது ஆயிரமாம் வருடங்களின் பிற்பகுதிகளில் தான் அதிகம் பயன்படுத்தப்பட்டது. எப்படியெனில், கி.மு. 2700களில் ஈரானில் ஒட்டகங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றும் கி.மு. 2300 சிந்து சம வெளிகளிலும், கி.மு. மூன்றாம் ஆயிர வருடங்களின் பிற் பகுதிகளிலும் இரண்டாம் ஆயிர வருடங்களின் முற்பகுதிகளிலும் தெற்கு அரேபியாவில் பயன்படுத்தப்பட்ட சான்றுகள் உள்ளன. மேலும், நெகேவ்(தெற்கு) பகுதிகளில் ஒட்டகங்களின் எலும்புகள் அரராத் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன, அவை கி.மு. 2900களை சேர்ந்தது, மற்றும் பிர் ரிஸிஸிமில் கி.மு. 1900 சேர்ந்தவைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.[18] பின் கொடுக்கப்பட்ட காலம் ஆபிரகாமின் காலத்திலிருந்து நீண்ட நாட்கள் நிலைக்கவில்லை. முந்தைய வசனங்களில் ஒட்டகங்களைப் பற்றிக் குறிப்பிடாததன் காரணம் அவை செல்வத்திற்கு அடையாளமாய் கருதப்பட்டது. அப்படியானால், ஆதியாகமத்தில் இதைக்குறித்த முந்தைய குறிப்புகளானவை ஆபிரகாமின் செல்வத்தை குறிக்கவே ஆகும் (காண்க 13:2; 24:10; 26:12-14; 31:34).

## ஏமாற்றியதன் எதிரொலி (12:17-20)

**17ஆபிராமுடைய மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார். 18அப்பொழுது பார்வோன் ஆபிராமை அழைத்து: நீ எனக்கு ஏன் இப்படிச் செய்தாய்? இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமற்போனதென்ன? 19இவளை உன் சகோதரி என்று நீ சொல்லவேண்டுவது என்ன? இவளை நான் எனக்கு மனைவியாகக் கொண்டிருப்பேனே; இதோ உன் மனைவி; இவளை அழைத்துக்கொண்டுபோ என்று சொன்னான். 20பார்வோன் அவனைக் குறித்துத் தன் மனுஷருக்குக் கட்டளை கொடுத்தான்; அவர்கள் அவனையும், அவன் மனைவியையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அனுப்பிவிட்டார்கள்.**

**வசனம் 17.** கதையின் இப்பகுதில், கர்த்தர் தலையிட்டு **ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராயினிமித்தம் பார்வோனையும்**

**அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார்.** கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் எவ்வகை வாதையினால் வாதித்தார் என்று கூறவில்லை. எபிரெய பதமாகிய (נֶגַע, *nega'*, நேகா) என்பது பெரும்பாலும் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பற்றக்கூடிய வியாதிகளையே குறிக்கிறது. தோல் வியாதி அல்லது குஷ்டரோகம் போன்றவை (லேவி. 13; 14). எனினும், சில நேரங்களில் தெய்வீக தண்டனையின் விளைவாக வரும், மோசே காலத்தில் எகிப்து மக்களுக்கு வந்தது போலவும் (யாத். 11:1) உசியா இராஜாவை குஷ்டரோகத்தின் மூலம் தண்டித்தது போலவுமே (2 இராஜா. 15:5[19]).

பார்வோன், தான் ஆபிரகாமின் மனைவியை கொண்ட தினாலேயே ஒரு தெய்வம் தன்னை வாதிக்கின்றது என்று நம்பினான். பார்வோன் தன்னையே கடவுளாக நினைத்ததினால், தன்னைவிட வலிமையான தெய்வம் ஆபிரகாம் மற்றும் சாராளினிமித்தம் தன்னை தண்டிக்கிறது என்று நம்பினால் மட்டுமே அவ்விருவருக்கும் நன்மதிப்போடு பதிலளிப்பான். இதில் அவன் நம்பியது சரியே, கர்த்தர் ஆபிரகாமிற்கு "… உன்னை சபிக்கிறவனை சபிப்பேன்" (12:3) என்று வாக்குக் கொடுத்திருந்தார். இந்த சூழ்நிலையில் பார்வோன் ஆபிரகாமோடு சரியான உறவில் இல்லை, தன் மனைவியை கொண்டிருந்தான். ஆகவே அவன் தெய்வீக சாபத்தினால் (வாதை) வருந்தினான்.

**வசனங்கள் 18, 19.** எப்படியோ இராஜா, தன் வீட்டின் மேல் விழுந்த வாதைக்கு ஆபிரகாமின் தேவனே காரணம் என்பதை உணர்ந்தான் (12:17). அதினால் **பார்வோன் ஆபிராமை அழைத்து**. அவன் மீது உள்ள பழியை நீக்கிக்கொள்ளவும் அதை ஆபிரகாமின் மேல் போடவும், இம்மூன்று கேள்விகளை கேட்டான்:

1. ***நீ எனக்கு ஏன் இப்படி செய்தாய்?***
2. ***இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமற் போனதென்ன?***
3. ***இவளை உன் சகோதரி என்று நீ சொல்லவேண்டிவது என்ன?***

ஆபிரகாம் இக்கேள்விகளுக்கு மறுமொழி கொடுத்தானா? ஒரு வேளை கொடுத்திருந்தால், அவனது பதில் நமக்கு கொடுக்கப் படவில்லை.[20] நிச்சயமாக நமக்கு தெரியும், ஆபிரகாம் தன் மனைவியை பொய் சொல்லும்படி கூறி, பார்வோனை ஏமாற்ற முக்கிய காரணமாக இருந்தான் என்று, மறு பக்கம், இந்த சூழ்நிலையில் பார்வோன் ஒன்றும் அறியாததைப் போல நடித்தான், இவ்விஷயத்தில் அவன் குற்ற உணர்ச்சி இல்லாதது போல் இருந்தான். பார்வோன் அப்பாவியைப் போல் நடந்தாலும், அவனும் குற்றமுடையவனே. பண்டைய காலத்தில் கொடுங்கோல் ஆட்சி புரிந்த மன்னர்களுடைய ஆசைகள் மறுக்கப்படாது, ஆபிரகாம் தன் பயத்தினால் பொய் கூறினான். மேலும், சாராளுடன் தன் உண்மையான உறவை கூறுவது அவனுக்கு

நன்மையான மாற்றத்தை கொண்டு வரும் என்பது சந்தேகமே. எகிப்தியர்கள் அந்நியர்களையும் அவர்கள் மனைவிகளையும் எவ்வாறு நடத்துகிறார்கள் என்ற கதை உண்மை என்றால், ஆபிரகாம் பார்வோனுக்கு பயப்பட முறைப்படியாக காரணம் இருந்தது. சிக்கல் என்னவென்றால், ஆபிரகாமின் விசுவாசம் சிறியதாய் இருந்தது. யாவே, அவரது திட்டத்தை குலைக்கும் எகிப்தியரிடமிருந்து தன்னை காப்பாற்றி தன் சந்ததி மூலம் பூமியிலுள்ள சகல தேசங்களை ஆசீர்வதிப்பார் (12:3) என்று ஆபிரகாமால் இன்னும் நம்ப முடியவில்லை.

ஆபிரகாம் பார்வோனுக்கு பதிலளிக்க முயற்சித்து இருந்தாலும், இராஜா எந்த சாக்குகளையும் கேட்கும் மனநிலையில் இல்லை. இராஜா முன்னமே இந்த அந்நியனுக்கு மந்தைகளையும் கால்நடைகளையும் வேலைக்காரர்களையும் கொடுத்திருந்தான், இப்போது அவனது தெய்வத்தினால் வாதிக்கப்பட்டதினால் தர்மசங்கடத்தில் இருந்தான். அவன் வெறுப்புடன் ஆபிரகாமை நோக்கி, **இதோ உன் மனைவி, இவளை அழைத்துக்கொண்டுபோ** என்று சொன்னான். பார்வோன் கொடுத்த மிருகங்களையும் வேலைக்காரர்களையும் திரும்பிக் கேட்கவில்லை, ஒரு வேளை மீண்டும் கர்த்தரால் வாதிக்கப்படுவோம் என்று பயந்திருப்பான்.

**வசனம் 20. பார்வோனை** கருத்தில் கொண்டால், அவன் எடுத்த நடவடிக்கைகளில் சிறந்தது என்னவென்றால், ஆபிரகாமை எகிப்தைவிட்டு கூடிய விரைவில் வெளியே அனுப்பியது தான். பார்வோன் **தன் மனுஷருக்குக் கட்டளை கொடுத்தான்**, அவர்கள் அவனையும், **அவன் மனைவியையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும்** அனுப்பிவிட்டார்கள். ஆபிரகாம் பார்வோனிடம் பெற்ற தன் உடைமைகளில் பல வெகுமதிகள் இருந்தது (12:16).

## நடைமுறைப்படுத்துதல்

### ஆபிரகாமுக்கு கர்த்தரின் அழைப்பு (12:1-9)

கலாத்தியர் 3:8இல் அப்போஸ்தலனாகிய பவுல், "தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறார் என்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது" என்று கூறியுள்ளார். இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வரும் வரை "சுவிசேஷம்" சொல்லப்படவில்லை என்றிருக்கும் போது, இது எப்படி சாத்தியமாகும்? இதற்கான விடை "சுவிசேஷம்" என்ற அடிப்படை அர்த்தத்தில் அமைந்துள்ளது. கிரேக்க பதமான (εὐαγγελίζομαι, *euangelizomai*, எவன்ஜெலிஜோமை), என்பதற்கு

இணையான எபிரெய வார்த்தை (בָּשַׂר, *baśar*, பாசர்) என்றிருக்கும் போது, இரண்டுமே நற்செய்தியை அதிகாரப் பூர்வமாக அறிவித்தல் அல்லது மகிழ்ச்சியான செய்திகள் என்று குறிப்பிடப்படுகிறது.[21]

பழைய ஏற்பாட்டில் உள்ள மதச்சார்பற்ற சூழ்நிலைகளில் (டிய'ளயச) *baśar* என்ற வார்த்தையானது, யுத்தத்தில் ஒரு வெற்றி என்ற நற்செய்திகளை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறது (1 சாமு. 31:9; 2 சாமு. 1:20; 18:19, 20). எப்படி இருந்தாலும், இறையியல் சூழ்நிலைகளின்படி, இது கர்த்தரின் நற்செய்தி மற்றும் அவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார், காப்பாற்றுகிறார் மற்றும் துன்பத்திலும், பாவத்தில் மூழ்கி காணாமல் போன மக்களை மீட்கிறார் என்ற அர்த்தங்கொள்ளுகிறது (ஏசாயா 52:7; 61:1).

கர்த்தர் ஆபிரகாமுக்கு சுவிசேஷத்தை போதித்த (நற்செய்தி) பொழுது, நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்: நீ ஆசீர்வாத மாயிருப்பாய். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்ற செய்தியை, கோத்திரத் தலைவனுக்கு வாக்களித்துள்ளார் (ஆதி. 12:2, 3). சுவிசேஷமானது, எத்தனை வகையான பார்வையில் ஆபிரகாமுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது?

*கர்த்தருடைய கிருபையால் அவரது அழைப்பு உள்ளது.* பூமியில் ஆபிரகாம் கர்த்தருக்குப் பயந்தவனும் மற்றும் நீதிமானாய் இருந்ததினால், அவனை கர்த்தர் அழைத்திருக்கமாட்டார். சீனாய் மலையில் இஸ்ரவேல் மக்களுக்கு மோசே கர்த்தரிடம் இருந்து பெற்றுக் கொண்ட கட்டளைகள் எல்லாவற்றையும், நூறு ஆண்டுகளுக்கு முன்பே கோத்திரத்தலைவன் கடைபிடித்தான் என்பதும் இந்த அழைப்புக்கு சாத்தியக்கூறு இல்லை.

சாதனை தெளிவாக இருக்கிறது: ஆபிரகாமோ அல்லது அவரது குடும்பமோ உண்மையான மெய்த்தேவனையும் மற்றும் அவரது சட்ட திட்டங்களையும் நன்கு அறிந்திருக்கவில்லை. ஐபிராத்து நதிக்கு அப்பால் குடியிருந்த இஸ்ரவேலரின் மூதாதையர்களைப் பற்றி யோசுவா குறிப்பிடும்போது, பூர்வத்திலே "உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனாகிய தேராகு என்பவனும்" "வேறே தேவர்களைச் சேவித்தார்கள்" எனக் கூறியுள்ளான் (யோசுவா 24:2). வேறுவார்த்தைகளில் சொல் வதானால், தெற்கு மெசெப்பொத்தோமியாவில் அவனைச் சுற்றிலும் எஞ்சியிருந்த மற்ற மக்களைப் போலவே அவர்களும் விக்கிரக ஆராதனைக்காரர்களாய் இருந்தார்கள். ஆகவே, கர்த்தரின் அழைப்பானது, சுத்த கிருபையை (தகுதியில்லாத ஒத்தாசை) அடிப்படையாகக் கொண்டுள்ளது; ஆபிரகாம் எவ்வாறு இருந்தான் என்பதைப் பொறுத்தோ அல்லது கர்த்தருடைய விசேஷ ஒத்தாசையைப் பெற அவன் என்ன செய்தான் என்பதைப் பொறுத்தோ இல்லை (ரோமர் 4:1-5). கர்த்தர் ஆபிரகாமை

அழைத்தது எதற்கென்றால், கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின் வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்று கோத்திரத் தலைவனைப் பற்றி சொல்லியுள்ளார் (18:19).

ஆகையால், இது இன்று இப்படியாக இருக்கிறது: பாவிகளை சுவிசேஷத்தின் மூலம் கர்த்தர் அழைக்கிறார் (2 தெச. 2:13, 14) மற்றும் நம்முடைய தகுதியைப் பொறுத்தோ அல்லது நாம் என்ன செய்தோம் என்பதைப் பொறுத்தோ, இது இருக்கவில்லை. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் (எபே. 2:8, 9), அந்தப்படி, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (2 கொரி. 3:18). கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகிய நாம் (2 கொரி. 5:17), இந்த உலகத்தின் ஆசீர்வாதத்திற்கு காரணராக இருக்க வேண்டும். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் என்பதைப் போல, மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது" (மத். 5:16; எபே. 2:10).

*கர்த்தருடைய அழைப்பு விசுவாசத்தை உண்டாக்குகிறது.* எபிரெய நிருபத்தை ஆக்கியோன் "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர் களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி. 11:6) என்று அறிவிக்கிறார். மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது (காண்க கலா. 3:8). இந்த விசுவாசமே, ஊர் என்ற பட்டணத்தை விட்டு, புதிய வாக்குத்தத்த பூமியை நோக்கிச் செல்ல வழி வகுத்தது.

அதைப் போலவே, புதிய ஏற்பாட்டில் பவுல் "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று கூறியுள்ளார் (ரோமர் 10:17). கர்த்தருடைய வார்த்தையை சுவிசேஷமாக கேட்பதினால் விசுவாசம் வருகிறது என்றும், நற்செய்தியானது கர்த்தர் என்ன செய்துள்ளார் என்பதைச் சார்ந்தும் மற்றும் மனித இனத்திற்கு இயேசு கிறிஸ்து மூலமாய் செய்வார் என்பதே ஆகும்.

தேவன் அன்புடன் தன்னை ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினார் மற்றும் தான் யார் (ஒன்றான மெய்த்தேவன்) என்ற சுவி சேஷத்தையும்

(நற்செய்தி) போதித்துள்ளார் மற்றும் கோத்திரத் தலைவனுக்கு அவர் என்ன செய்யவிருக்கிறார் என்பதையும் தெளிவுபடுத்தி உள்ளார். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நான் உன்னை "பெரிய ஜாதியாக்கி," உன்னை ஆசீர்வதித்து, உன் "பேரைப் பெருமைப்படுத்துவேன்" நீ ஆசீர்வாதமாயிருப்பாய். உன்னை "ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்," உன்னை "சபிக்கிறவனைச் சபிப்பேன்," "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம்" உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்துள்ளார் (12:2, 3). இறுதியாக, 11:31 மற்றும் 12:1இல் சுட்டிக் காட்டியுள்ள படி, ஆபிரகாமுடைய வம்சாவளிகளுக்கு கர்த்தர் வாக்குறுதி அளித்துள்ள வாக்குத்தத்த பூமியான கானானை கொடுப்பது பற்றியும், 12:7 மற்றும் 13:14-17இல் இந்த வாக்குறுதி, அவனுக்கும் மற்றும் அவனது வம்சாவளிகளுக்கும் கையளிக்கப்பட்டதும் உறுதியாகியுள்ளது.

புதிய ஏற்பாட்டிலே, முதலாம் நூற்றாண்டில், அப்போஸ்தலர் கள் தங்களது சொற்பொழிவுகளிலே, தேவன் இயேசுவைக் கொண்டு உலகத்தை மீட்க என்ன செய்துள்ளார் என்ற தலைப்பிலே இயேசுவின் போதனைகளை எப்பொழுதும் போதித்துள்ளார்கள். இயேசுவின் வாழ்க்கை மற்றும் அவரது சேவைகள், அவரது பாவ நிவாரண மரணம் மற்றும் அவரது அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் பரலோகத்திற்கு ஏறுதல், இவைகள் எல்லாம் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாய் இருக்கிறது என்பதை அவர்கள் வலியுறுத்தினார்கள். இந்த சம்பவங்கள் எல்லாம், தேவன் அவரை கர்த்தர் மற்றும் கிறிஸ்து (மேசியா) என்று ஏற்படுத்தியுள்ளார் என்பதன் அடையாளமாயிருந்தது. பெந்தெ கொஸ்தே நாளிலே, பேதுரு "இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16) என்று ஆணித்தரமாக போதித்துள்ளார், ஏனென்றால் அது, அவர்கள் மேசியாவை நிராகரித்ததையும், மக்கள் மனந்திரும்பவும் மற்றும் விசுவாசத்தை (ரோமர் 10:17) அவர்கள் இருதயங்களில் ஏற்படுத்தியதும் ஆகும் (அப். 2:14-36). இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்றார்கள் (அப். 2:37), பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் "மனந்திரும்பி," "ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று" "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்," அப்பொழுது "பரிசுத்த ஆவியின் வரத்தைப்" பெறுவீர்கள் (அப். 2:38) என்றார்.

மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் என்பவைகள் சுவிசேஷம் இல்லை, சுவிசேஷத்தை கேட்டதன் மூலம், ஒவ்வொரு தனிநபர்களின் தீர்மானம் மற்றும் விசுவாசத்தில், எப்படி மறுமொழி கொடுக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவும், வெறும் கட்டளைகளாக இவைகள் உள்ளன. இரட்சிக்கும் விசுவாசம் என்பது ஒரு

கீழ்படிதலுமாயிருக்கிறது: தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலம், மனித இனத்திற்கு என்ன செய்தார் என்ற நற்செய்தியை அவர்கள் கேட்ட பொழுது, பாவிகள் மறுமொழியாக மனந்திரும்புதலையும் மற்றும் ஞானஸ் நானத்தையும் கடைப்பிடித்தார்கள். செய்த செயல்களின் தகுதியின் அடிப்படையில், இரட்சிப்பு வருவதில்லை, அது "கீழ்ப்படிதலின் விசுவாசம்" (ரோமர் 1:5) என்றும் மக்களுடைய பாவங்களைப் போக்க, கிறிஸ்து என்ன செய்துள்ளார் என்பதை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது என பவுல் விளக்கியுள்ளார்.

*கர்த்தரின் அழைப்பு சுயமாயுள்ளதாயும் மற்றும் அது கீழ்ப்படிதல் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளது.* ஆபிரகாமின் முதல் அழைப்பு ஊர் என்ற பட்டணத்தில் (தெற்கு மெசெப்பொத்தோமியா) இருக்கும் போது வந்தது (ஆதி. 15:7). அப்போஸ்தலர் 7:2இல் ஸ்தேவானின் கூற்றுப்படி, கர்த்தரால் சொல்லப்பட்ட வார்த்தையின்படி மாத்திரம் அல்ல, அவருடைய மகிமையின் தோற்றத்தைப் பொருத்துமாகும் (a theophany) (ஒரு தியோபனி). இது தேவையுள்ள ஒன்றாய் உள்ளது, ஏனென்றால் இதில் ஒரு கடினமான கோரிக்கை அடங்கியுள்ளது. கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப் போ என்றார் (அப். 7:3; காண்க ஆதி. 12:1). அந்த சமயத்தில், ஆபிரகாம் நிறைய தேவர்களைப் பின் பற்றி சேவித்து வந்ததால், ஒன்றான மெய்த் தேவனை அவனுக்கு வெளிப்படுத்த, கர்த்தருக்கு இது முக்கியம் வாய்ந்ததாயும், அவனது பழைய வாழ்க்கையில் ஒரு பூர்த்தியான பிரிவினையை உண்டாக்கி, அவன் விசுவாசத்தில் நடக்க ஒரு துவக்கத்தை, ஒரு வியக்கத்தக்க வழியில், அவனை அழைத் திருந்தார், கோத்திரத் தலைவனது எண்ணம், தந்திரக்காரனாக விளையாடிக் கொண்டிருக்காமலும் மற்றும் இது ஒரு வஞ்சனை அல்லது ஒரு கானல் நீர்அல்ல (இல்லாததை, இருப்பது போல் எண்ணும் தோற்றம்) என்றும் அவனை நம்பச் செய்யவேண்டியதாய் இருந்தது.[22]

இருந்த போதிலும், ஆபிரகாம் விசுவாசத்திலும் மற்றும் கீழ்ப்படிதலிலும் வளர வேண்டும். முன்னேறிச் செல்லுதல் மற்றும் தோல்வி ஆகிய இரண்டிலும், அனுபவங்களைப் பெறவும் அவனது விசுவாசத்தில் உறுதியாய் வளரவும் மற்றும் கீழ்ப்படிதலில் நிறைவாயிருக்கவும், இவைகளில் அனுபவங்களைப் பெற, பல வருடங்கள் எடுத்துக் கொள்ளும் (ரோமர் 4:20; யாக். 2:22). அவன் ஊர் பட்டணத்தில் இருந்த போது, நீண்ட மாட்டுவண்டி பிரயாணம் போல் மெதுவாக கடந்து, வாக்குத்தத்த பூமியை அடையும் பயணத்தைத் தொடங்க, அவனுக்கு போதுமான விசுவாசம் இருந்தது; ஆனால், அவனது குடும்பத்தைப் பின்னால் விட்டு விட்டு செல்வதற்கோ அல்லது

கானான் தேசத்தை அடைவதற்கு போதுமான பலமான விசுவாசமோ அவனுக்கு இல்லை. அவனும், அவனுடன் சென்ற ஜனக்கூட்டத்தாரும், பிரயாணத்தின் பாதி வழியிலே நின்று விட்டார்கள், மற்றும் ஆரான் என்ற வட மேற்கு மெசெப்பொத்தோமியாவில் அவர்கள் குடி யேறினார்கள்.

ஆபிரகாம், இலக்கை அடையும் முன், நானூறு மைல்களுக்கு முன்பாகவே குடியேறி விட்டார்கள்; இதற்காக அவன் கர்த்தரிடம் வாக்குத்தத்த பூமியை அடையும் முன் பயணத்தை தடை செய்ய உத்தரவு வாங்கியதாகவோ, வேதாகமத்தில் எந்த ஒரு அறிகுறியும் இல்லை. அவனும் மற்றும் அவனது குடும்பமும் ஆரானில் நீண்ட காலங்களாக வாழ்ந்து வந்ததால், அது அவர்களது தேசமாக மாறியது (12:1) மற்றும் மறுபடியும் கர்த்தர் அவனை அழைத்து, நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு கானான் தேசத்துக்கு போ என்று சொன்ன போது, கோத்திரத் தலைவனுடைய தகப்பன் தேராகு இருந்தான் (12:1, 5). அந்த சமயம், ஆபிரகாம் எழுபத்து ஐந்து வயதுள்ளவலாயிருந்தான். சாராள், பத்து வயது இளைய வளாயிருந்தாள் (12:4; 17:17). ஊர் என்கிற பட்டணத்தில், முதலில் கர்த்தர் ஆபிரகாமை அழைத்த போது, அவனது வயது நமக்குத் தெரியாது, ஆனால், அவனுக்கு முப்பது அல்லது நாற்பது வயதாக இருந்திருக்கலாம் என சிலர் எண்ணுகிறார்கள். இந்த நிகழ்ச்சியில், இவ்வாறாக, அவன் அவனது வாழ்க்கையின் பாதிக்கு மேல் உள்ள காலத்தை, ஒரு தவறான இடத்தில் (ஆரான்) கழித்துள்ளான்.

ஆதியாகமம் 12:1-3இல் கூறியுள்ளபடி, அழைப்பைப் பெற்ற பின், ஆபிரகாமுடைய விசுவாசமானது, அவனது கால்களுக்குள் சென்று விட்டது, ஏனென்றால் மறுபடியும் அவன் கானானை நோக்கி பயணம் செய்யத் துவங்கினான். மீண்டும் ஒரு முறை, எல்லாவற்றையும் பின்னால் விட்டு விட்டு வராமல், அவன் குடும்பம் முழுவதையும் தன்னுடன் அழைத்துச் சென்றான் (12:4, 5). சாராள் இன்னும் மலடியாயிருந்தாள், மற்றும் ஆபிரகாமுக்கு குமாரன் அல்லது வாரிசு இல்லை. அவன் தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்தையும், தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் (அநேகமாக அடிமைகளை) கூட்டிக் கொண்டு, அதனுடன் கூட ஒரு பெரிய எண்ணிக்கையில் மந்தைகளும் மற்றும் கால்நடைகளுடன் புறப்பட்டு பயணப்பட்டான்.

“விசுவாசத்தினாலே,” இறுதியில் ஆபிரகாம் மற்றும் அவனுடைய பரிவாரங்களும் கானான் தேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள் (எபி. 11:8). கர்த்தருடைய அப்போஸ்தலர்களை செய்தது போல (மத். 17:20; மாற்கு 4:40; லூக். 17:5, 6), கோத்திரத் தலைவனும் விசுவாசம், கீழ்ப்படிதல், கிருபை மற்றும் சத்தியத்தை அறிகிற அறிவு ஆகியவற்றில் வளர வேண்டியிருந்தது. இக்காலத்திலும் கூட, எல்லா தேவ ஜனங்களும்

இதைப் போன்ற சவாலை எதிர் கொண்டிருக்கிறார்கள். தேவ அழைப்புக்கு கீழ்ப்படிந்து, ஒரு கிறிஸ்தவனாக மாறின ஒவ்வொருவரும், கர்த்தருடன் நடக்கத் துவங்கவும் மற்றும் விசுவாசத்தில் வளர்ந்தேற முயல வேண்டும் (மத். 28:19, 20; மாற்கு 16:15, 16; 1 பேதுரு 2:1, 2; 2 பேதுரு 3:18).

*கர்த்தர் கானானிலே ஆபிரகாமை திரும்பவும் அழைத்தார், மற்றும் இது வழிபடுதல் பற்றி இன்னும் தெளிவாக கற்றுக் கொள்ளுமாறு அமைந்தது.* ஆபிரகாம் வாக்குத்தத்த பூமியை வந்து அடைந்தபின், சீகேம் (மத்திய கானான்) என்னும் இடத்துக்கு பயணத்தை தொடர்ந்தும், கானானியர் அத்தேசத்திலே அதிகப் படியான பூமியை கைப்பற்றியுள்ளார்கள் என்பதையும் புரிந்து கொண்டான் (12:6). அவனுடைய ஆவி தொய்ந்து போயிருக்க வேண்டும், மேலும் இந்த பூமியானது நம்முடைய வம்சாவளிகளுக்கு சுதந்தரமாகப் போவது எப்படி சாத்தியமாகும் என மலைத்திருக்க வேண்டும். அவனது விசுவாசத்தை பெருகச் செய்யும் வகையிலும் மற்றும் அவனது விசாரங்களைப் போக்க, கோத்திரத் தலைவனுக்கு “கர்த்தர் தரிசனமாகி” மறுபடியும் நற்செய்தியை அவனுக்குப் போதித்தார், மற்றும் அவனது “வம்சாவளிகளுக்கு” கானான் தேச பூமியைத் தருவதாகவும் வாக்குறுதியளித்தார். இது, “அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டும்” (12:7) அளவிற்கு, அவனை ஊக்குவிப்பதாயும் மற்றும் அவனது விசுவாசத்தை பெலப்படுத்தும் வண்ணமாகவும் அமைந்தது. அவன், சீகேமிலுள்ள பல தெய்வ வணக்கமுள்ள பலிபீடத்திற்கு வழிபடச்[23] செல்லமாட்டான் என்று, அவனது இந்த தைரியமான செயல் வெளிப்படுத்தியது. ஆனால் மெசெப்பொத் தோமியாவிலிருந்து அவரை இந்த வெளிநாட்டிற்கு அழைத்து வந்தவருமாகிய யெகோவாவை மட்டுமே கௌரவப்படுத்துவான்.

பின்பு ஆபிரகாம் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து, பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவே “இருக்கக் கூடாரம் போட்டு,” மேலும் அங்கே கர்த்தருக்கு மற்றொரு பலிபீடத்தைக் கட்டி, “கர்த்தருடைய நாமத்தை” தொழுது கொண்டான் (12:8). கானானில் கோத்திரத் தலைவன் எங்கெங்கு பிரயாணம் செய்கிறாரோ, அங்கெல்லாம் தவறாமல் அவன் இருக்கக் கூடாரம் போடுவது, ஒரு பலிபீடம் கட்டுவதும் மற்றும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தான் (12:7, 8; 13:3, 4, 18). “வாக்குத்தத்த பூமியிலே அவன் ஒரு அந்நிய நாட்டுக்காரன்” என்பதை கூடாரமானது சாட்சி பகர்ந்தது (எபி. 11:8, 9), அவன் அவனது குடும்பத்திற்காக ஒரு நிரந்தரமான கட்டிடத்தை கட்டவில்லை. அவனது முந்தின காலங்களில், பல தெய்வ வணக்கம் கொண்ட கலாச்சாரத்தை மாத்திரமே அவன் நன்கு அறிந்திருந்ததும், மற்றும் தன்னை மெசெப்பெத்தோமியாவில் இருந்து

அழைத்து வந்த ஒரே கர்த்தருக்கு அவன் நன்றி கூறும் வகையிலும், மற்றும் அவரிடம் வைத்திருந்த விசுவாசத்திற்கு சாட்சியாக பலிபீடம் அமைந்துள்ளது.

எந்த ஒரு விக்கிரகங்களும் இல்லாமல் பலபீடங்களைக் கட்டி கோத்திரத் தலைவன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வதை அவனுடைய அண்டை வீட்டாராகிய கானானியர்கள் நிச்சயமாக கவனித்திருக்க வேண்டும். அவன் எங்கு சென்றாலும் கூடாரம் போட்டு, அங்கே கர்த்தருக்கு பலிபீடம் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளும் வழக்கத்தைத் தவிர, அதற்கென்று நியமிக்கப்பட்ட ஒரு பரிசுத்த பூமியும் அவனுக்கு இல்லை. இது, கானானியர்கள் அவர்களது பிரத்தியேக தெய்வங்கள், காலத்திற்கும் மற்றும் இடத்திற்கும் மட்டுமே கட்டுப்பட்டு இருப்பது போல, யெகோவா இருக்கவில்லை என்பதை உணர்ந்துள்ளார்கள். கர்த்தரை ஆபிரகாம் திறந்த வெளியில் எந்த இடத்திலும் தொழுது கொள்வதன் தன்மையானது, யெகோவாவின் ஆவிக்குரிய உண்மையான இயல்பை உலகிற்கு பறை சாற்றுகிறது. பல தெய்வ வழிபாடுகளைக் கொண்ட ஜனங்கள் ஆபிரகாமை கவனித்துக் கொண்டிருந்த போதும், அவன் வெட்கப் படாமல், திறந்த வெளியில் கர்த்தரைத் தொழுது கொண்டது அவனது நன்மதிப்பைக் காட்டியுள்ளது. கர்த்தர் அவனை அழைத்ததும், அவனை ஆசீர்வதிப்பேன் என்னும் வாக்குறுதி கொடுத்ததும் மற்றும் அவனுக்கு ஒரு புதிய ஆரம்பத்தைக் கொடுத்து ஊழ் வினையானது கானானியர்களின் பூமியிலே குடியிருக்குமாறு வழி வகுத்துத் தந்ததற்கும் ஏற்றாற் போல், அவனது செயல்கள் அவன் கர்த்தர் மேல் வைத்துள்ள விசுவாசத்திற்கு சாட்சி பகர்ந்துள்ளன.

ஆபிரகாமின் வழியைப் போல் இன்று, நம்மை நம் இனத்தை விட்டுப் புறப்பட்டு தூர இடங்களுக்குச் செல்லுமாறும் மற்றும் அங்கு “அந்நியர்களும்; பரதேசிகளுமாய்” (எபி. 11:13) தங்கும்படியும் கர்த்தர் அழைக்கவில்லை. நாம் எங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும், நாம் இந்த உலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்பதும் மற்றும் இது நமக்கு நிரந்தரமான வீடு அல்ல என்றும் நினைவுகூரும் பொருட்டு, நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக சுவிசேஷத்தினாலே இரட்சிக்கப்பட அவர் நம்மை அழைத்துள்ளார் (2 தெச. 2:14). நம்மையும் மற்றும் நம்முடன் இருக்கும் மற்றவர்களையும் கீழே விழத்தள்ளும் லௌகீக ஆடம்பரங்கள் மற்றும் நமக்கு இன்ப உணர்ச்சிகளைக் கொடுக்கும் சரீர தூண்டுதல்களில் இருந்தும் விலகி இருக்க வேண்டும். நாம் “முதிர்ச்சி அடைவதில் வேரூன்றி இருக்குமாறு” இருப்பதும் (எபி. 6:1) மற்றும் “மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை

நோக்கி, நமக்கு நியமத்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக் கடவோம்" (12:1). ஆபிரகாமைப் போல நாமும் "இந்த பிர பஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல்" (ரோமர் 12:2), இங்கு நாம் ஆடம்பரமாக மற்றும் உல்லாசமாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒரு அந்நிய பூமியைக் கடந்து வந்துள்ள "அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற" பார்த்து (1 பேதுரு 2:11), நம்முடைய குடியிருப்போ "பரலோகத்திலிருக்கிறது" (பிலி. 3:20; எபி. 11:10, 15, 16) என்ற நம்முடைய நிரந்தரமான குடியிருப்பை கண்டிப்பாக நினைவுகூர வேண்டும்.

## ஒரு விசுவாச மனிதனுக்கு வந்த சோதனைகள் (12:10-20)

ஆபிரகாம் அவனுடைய விசுவாசத்தில், ஒரு ஆழ்ந்த ஈடுபாட்டுடன் வளர்ந்தேற, அவனுக்கு சில கால அவகாசம் தேவைப்பட்டுள்ளது. அவனது கீழ்ப்படிதல் பாகுபாட்டுடன் இருந்த போதிலும் மிகவும் உறுதியானதாக மாறியுள்ளது என்பது நமக்கு சாட்சியாக உள்ளது. எப்படி இருந்தாலும், அதே மனிதன் சோதனையிலும், கண்ணியிலும், பயத்திலும் மற்றும் நீதி நெறிக்குரியவையில் குறைவு பட்டிருந்ததையும் பார்த்தால், கர்த்தரிடத்தில் உள்ள விசுவாசக் குறைவுதான் காரணம் என தெரிய வந்துள்ளது. பல வருடங்களுக்குப் பிறகு, ஆபிரகாம் விசுவாசத்தினால் நடந்து வந்து, இறுதியாக வாக்குத்தத்த பூமியை அடைந்தான். அவன் ஊர் மற்றும் ஆரானை விட்டு வந்த பின், ஒரு நீண்ட, விடாமுயற்சியுள்ள பயணத்துடன் கானானை வந்து அடைந்தது, இப்பொழுது அவனுக்கு பின் அனுபவமாக இருந்த போதிலும், அதிகப்படியான பிரச்சனைகள் அவனது குடும்பத்திற்குள் தான் இருக்கும், அதை மேற்கொண்டு விடலாம் என்று அவன் நினைத்திருக்க வேண்டும். எப்படி இருந்தாலும், வெகு விரைவில் இது அந்த மாதிரியான வழக்கு இல்லை என அவன் கண்டு பிடித்தான். அவன் கானானை விட்டு இடம் பெயரும் படி, புதிய சிக்கல்கள், அவனுக்கு ஆசை காட்டும் படி எழுந்ததும், மற்றும் அவன் தனது மனைவி சாராளை வஞ்சித்து, அவனது எதிர்கால சந்ததியே ஆபத்துக்குள்ளாகும் நிலை வந்தது.

அடிக்கடி கர்த்தருடைய பிள்ளைகள் கஷ்டங்களையும் சோதனைகளையும் அனுபவிக்கும்படி கர்த்தர் அனுமதிக்கிறார் என்பதையும், அதனால் அவர்கள் சீர்கேட்டை அடைந்துள்ளதைக் காணலாம். பல நேரங்களில், கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கும் ஒருவன் துன்பங்களை அனுபவிப்பதையும், அதே சமயம், துன்மார்க்கர் என்றும் சுக ஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப் பண்ணுவதைக் காணும் போது, அதன் மூலம் சங்கீதக்காரன் குழப்பத்துடன் உள்ளான் (சங். 73:2-14; காண்க யோபு 1:1-3:26). ஆவிக்குரிய வாழ்வை கர்த்தருடன் இணைந்து யாரெல்லாம் அதிகம் ருசித்துள்ளார்களோ,

கர்த்தர் அவர்களுக்கு தாமாகவே முன் வந்து அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தி, அவர்களது வழிகளை அதிசயிக்கும் வண்ணம் நடத்துவதிலும், அவர்களது தேவைகளை சந்திப்பதிலும் அல்லது பெரிய ஆபத்திலிருந்து அவர்களை காப்பாற்றிய போதிலும், அவர்களை பலவிதமான சோதனைகளிலும், பரீட்சையிலும் அகப்படச் செய்து சோதித்துள்ளார் என்பதற்கு, திருமறை நூல்களில் ஏராளமான உதாரணங்கள் எடுத்துக்காட்டுடன் விளக்கப்பட்டுள்ளன.

யாத்திராகமம், எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எவ்வாறு விடுவித்தார் என்பது இந்த மாதிரிக்கு ஒரு முன் உதாரணமாக பதிவு செய்துள்ளது. எகிப்திய சேனைகளிடமிருந்து, இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் விடுவிதது, செங்கடல் வழியாக பத்திரமாக அவர்களை கொண்டு வந்த மீட்பின் அனுபவங்களில் மகிழ்ச்சியானது, அவர்களை உடனடியாக வனாந்திரங்களில் சோதனைகளுக்கு உட்படுத்த வழி வகுத்துள்ளது. முதலில் அவர்களுக்கு குடிப்பதற்கு கசப்பான தண்ணீரை கண்டு கொண்டதும் (யாத். 15:22-27), பிறகு அவர்கள் பசியாயிருந்தார்கள் (யாத். 16:1-36), மற்றும் இறுதியாக, அவர்கள் பருகுவதற்கு கொஞ்சமும் தண்ணீர் இல்லாமல் இருந்தார்கள் (யாத். 17:1-7). ஒவ்வொரு முறையும், இஸ்ரவேல் ஜனங்கள் சோதனைகளை எதிர் கொள்ளும் நேரங்களில், கர்த்தர் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதையும் கர்த்தரின் பேரில் உள்ள விசுவாசக் குறைவையும், அவர்களுக்கு விவரித்து காண்பித்துள்ளார், கர்த்தருடைய பிரதிநிதியான மோசேக்கு எதிராக முறுமுறுக்கும் போது, அவர்கள் கர்த்தருக்கு எதிராக பாவம் செய்துள்ளார்கள் (காண்க எண். 14:22).[24] சோதனையானது, அவர்களது பயணங்களின் பல கட்டங்களில் விசுவாசிகளுக்கு பல வழிகளில் வருவதை, நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

*பாதகமான சூழ்நிலைகளில் சோதனை.* அவனை சோதிப்பதற்கு, அந்த பூமியில் பஞ்சம் வருவதற்கு நீண்ட காலங்களுக்கு முன்பே, கோத்திரத் தலைவன் கானானில் இருந்திருக்க முடியாது. இந்த பஞ்சம், தண்ணீர் பற்றாக் குறைவினால் அவனது பயணங்களின் கூட்டாளிகள் மற்றும் அவனது மந்தைகளும் கால்நடைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஊர் அல்லது ஆரான் பட்டணத்தில் ஆபிரகாம் இந்த மாதிரியான நிலையை சந்தித்ததற்கான எந்த ஆதாரமும் திருமறை நூல்களில் குறிப்பிடப்பட்டதாக தெரியவில்லை, ஆனால் இப்போது கர்த்தர் அவனுக்கு காண்பித்த, குடிபுகுந்திருக்கும் பூமியில், ஒரு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த பஞ்சமானது எவ்வளவு கொடியதாயிருந்தது அல்லது எவ்வளவு காலம் நீடித்தது என்பது குறித்த தகவல் நமக்கு சொல்லப்படவில்லை. பிறகு யாக்கோபு சிமியோனை காவற்கூடத்தில் இருந்து விடுவிக்க தன்னுடைய குமாரர்களுடன் பென்யமீனையும்

அனுப்பிய (41:56-43:23) சம்பவங்களுக்கு முன்பு யாக்கோபும் அவனது குடும்பம் மற்றும் கால்நடைகளும் கானானிலே கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் எகிப்திலிருந்து கொண்டு வந்த நிவாரணப்பொருட்களினால் பிழைத்து வந்துள்ளார்கள். அவர்கள் திரும்பி எகிப்திற்கு போவதற்கு முன்னே ஏற்கனவே ஒரு கொடிய பஞ்சத்தில் வாடியிருந்த போதிலும் மாற்றுப் பெயர் கொண்ட ஆட்சியாளர் யோசேப்புக்கு ஒரு உச்சிதமான வஸ்துக்களை காணிக்கையாக அவர்களுடன் எடுத்துச் செல்ல முடிந்தது. தேசத்தின் உச்சிதமான வஸ்துக்களில் கொஞ்சம் பிசின் தைலமும் கொஞ்சம் தேனும் கந்த வர்க்கங்களும் வெள்ளைப் போளமும் தொபித்து கொட்டைகளையும் மற்றும் வாதுமைக் கொட்டைகளையும் அவர்கள் அவனுக்குக் காணிக் கையாகக் கொடுத்தார்கள் (43:11). இந்த வகையான வஸ்துக்கள் எல்லாம் அவர்கள் கைவசம் இருந்திருந்தது. இன்றும் கானான் தேசத்தில் சில உணவுப் பொருட்கள் இருந்ததைச் சுட்டிக் காட்டுகிறது. இருந்த போதிலும் ரொட்டி செய்ய தேவையான தானியம் மற்றும் இதைப் போன்ற உணவுப் பொருட்கள் போதுமான அளவு இல்லாதபடியினால் தொடர்ந்து உயிர் வாழ முடியாது என யாக்கோபு வெளிப்படையாக எண்ணியிருக்கக்கூடும் எப்படி இந்தப்பஞ்சம் ஆபிரகாமுடைய நிலமையுடன் ஒப்பிடப் பட்டுள்ளது? இது குறித்து நமக்கு சொல்லப்படவில்லை.

கானான் தேசத்தை வந்தடைந்தபோது ஆபிரகாமுக்கு அவன் ஜனங்களுக்குத் தேவையான ஆகாரமும் தண்ணீரும் மற்றும் அவனுடைய மந்தைகளுக்கும் கால்நடைகளுக்கும் தேவையான புல்வெளிகளும் இருந்தது - ஆனால் இப்பொழுது அவர்களது வாழ்க்கையைக் கொண்டு செல்ல இம்மாதிரியான தேவைகளை எங்கு கண்டு கொள்ள முடியும்? என்ற கேள்வி எழும்புகிறது. நிச்சயமாக இந்த பஞ்சமானது அதிகரித்து கடுமையாகிக் கொண்டிருந்து ஒரு நீண்ட காலங்களுக்குத் தொடர்ந்தால் அவனுடைய பொருளாதாரம் வாழ்வாதாரம் மற்றும் எதிர்காலத்திற்கு இம்மாதிரியான பேரிடர் ஒரு அச்சுறுத்தலாக இருந்திருக்கக்கூடும். அவன் என்ன செய்ய வேண்டும்? அவன் இந்த காரியத்தை கர்த்தரிடம் எடுத்துச் சென்றதாகவோ அவரது வழிநடத்துதலுக்காக வேண்டிக் கொண்டதாகவோ அல்லது இந்த வறட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, மழை பொழிந்தருளச் செய்யுமாறு கர்த்தரிடம் அவன் விண்ணப்பம் பண்ணியதாகவோ நமக்கு எந்த வெளிப்பாடும் தெரியவில்லை. "யாரெல்லாம் பிறருக்கு உதவி செய்கிறார்களோ அவர்களுக்கு கர்த்தரும் உதவி செய்வார்"[25] என்ற கருத்தை மையமாகக் கொண்டு வாழ்ந்து வந்த மனிதனாய் ஆபிரகாம் இருந்த போதிலும், அவன் இதனை தனக்குத்தானே சிறந்த தர்க்கமாக எடுத்துக் கொண்டான்: வாக்குத்தத்த பூமியை விட்டு வெளியேறி எகிப்தில் குடியேறினான். "மனிதனுக்குச் செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு, அதின் முடிவோ மரணவழிகள்" (நீதி. 14:12) என்று பல

வருடங்ககளுக்குப் பிறகு ஞானியால் சொல்லப்பட்ட படி எப்படி இருந்தாலும் அவனது தீர்மானமானது ஒரு உற்று நோக்கும் செயலாக நம் மனதில் படுகிறது. கானானை விட்டு இடம் பெயர்ந்து எகிப்திற்குச் செல்ல வேண்டும் என்ற ஆபிரகாமுடைய தீர்மானமானது அவனுக்கோ அல்லது அவனுடன் இருந்தவர்களில் ஒருவனுக்கோ மரணத்தைக் கொண்டு வரவில்லை. மேலும் கர்த்தர் இடைப்படாதிருந் தாரானால் அதனை சுலபமாக செய்திருக்க முடியும் (காண்க 12:17).

கர்த்தர் அவருடைய மக்களுக்கு ஏன் சோதனைகளை அனுமதிக்கிறார்? என்ற இயற்கையான கேள்வி எழும்புகிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பட்டதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்படும் இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கும் புகழச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1 பேதுரு 1:7) என்று கூறியுள்ளார். நம்முடைய விசுவாசத்தை அங்கீகரிக்க மட்டுமே அவர் சோதனைகளை நம் வாழ்வில் அனுமதித்துக் கொண்டிருக்கிறார் என்றல்ல, ஆனால் நம்மை சுத்தப்படுத்தவும் நம்மில் உள்ள அவிசுவாசத்தை (னசழளள) (டிரோஷ்) நீக்குவதும் கர்த்தருடைய நோக்கமாகும் "விசுவாசிக்கிறேன். ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கண்ணீரோடு சத்தமிட்டுச் சொன்னான்" (மாற்கு 9:24) என்று ஒரு தருணத்தில் ஒரு மனிதன் இயேசுவிடம் சொன்னதைப் போலாகும். அதற்கு எதிர்மாறாக விசுவாசமுள்ள இருதயத்தில் அவிசுவாசம் குடிகொண்டிருக்க முடியாது என சிலர் பார்க்கிறார்கள் "விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்து போவது போலக் கடந்து போனார்கள்" (எபி. 11:29) என்று எபிரெய நிருபத்தை ஆக்கியோன் கூறியுள்ளான்; இருந்த போதிலும், அவர்களுடைய அவிசுவாசமானது, வனாந்திரங்களில் எவ்வளவு விரைவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது! அவர்கள் கர்த்தரிடத்தில் கொண்டுள்ள விசுவாசக்குறைவானது, அவர்கள் கானானது எல்லையை அடையும் வரையிலும், எல்லா வழிகளிலும் அவர்களது இருதயங்களில் விடாப்பிடியாய் குடி கொண்டிருந்தது (எண். 14:11). அதைப் போலவே, இயேசுவின் சீஷர்களும் அவர்மேல் நம்பிக்கை வைத்தும், அவர்களது வலைகளையும் விட்டு விட்டதுடன், வாழ்க்கைத் தொழிலையும் விட்டு அவரைப் பின்பற்றினார்கள்; இருந்த போதிலும் அவிசுவாசம் உள்ள தருணங்களும் அவர்கள் இருதயங்களில் குடிகொண்டிருந்தது. அவரைப் பிடித்துக் கொண்டு சென்ற போதும் மற்றும் பேதுரு அவரை மறுதலிப்பதற்கும், சீஷர்களெல்லாரும் அந்த இராத்திரியிலே ஓடிப் போனதும் போன்ற காரியங்களில் இவைதான் மனக்கசப்புக்கு மேல்தளமாயுள்ளது (மத். 26:56; மாற்கு 14:66-72).

சரீர தசைகளின் வளர்ச்சியைப் போன்றுதான், விசுவாசத்தின்

வளர்ச்சியும் உள்ளது. தசைகளின் வளர்ச்சிக்கு, பாரமான அல்லது கடினமான வேலையை உடற்பயிற்சியின் மூலம் மேற்கொள்வதே ஒரே வழியாகும், மற்றும் ஆவிக்குரிய தசைகளாகிய விசுவாசத்தை வளரச் செய்ய, வாழ்க்கையிலுள்ள கஷ்டமான தருணங்களில் உள்ள உடற்பயிற்சியே ஒரே வழியாகும். சில மனிதர்கள், ஒரு குறுகிய காலத்திற்குள்ளே, திடமான விசுவாசத்தை வளர்த்துள்ளார்கள்; இருந்த போதிலும், நம்மில் பலருக்கு ஆபிரகாமைப் போல, அது பல வருடங்களும் பல நெருக்கங்களையும் கடந்து ஒரு போதுமான திடமான விசுவாசத்தை வளரச் செய்து, "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை எல்லாம்" (எபே. 6:16) அவித்துப் போடத் தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாய் இருக்கிறோம்.

*தன்னைப் பாதுகாக்க பொய் சொல்லுவதற்கான சலனம்.* கோத்திரத் தலைவன் ஒரு பஞ்சம் என்ற பிரச்சனையிலிருந்து விடுபட, கானானை விட்டு இடம் பெயர்ந்தான். பஞ்சம் எவ்வளவு கொடிதாயிருந்ததோ என்பதைப் பற்றியோ, அல்லது அது எவ்வளவு காலம் நீடித்திருந்தது என்பதைப் பற்றியோ பொருட்படுத்த தேவையில்லாத போதிலும், அறிவுப்பூர்வமாகப் பார்த்தால், அவன் ஒரு பிரச்சனையிலிருந்து விடுபட்டு, அதைவிட ஒரு மோசமான விளைவை எதிர் நோக்குமாறு தள்ளப்பட்டு விட்டான். எப்பொழுதும் ஒரு தனிப்பட்ட ஒருவன், ஒரு சோதனையிலிருந்து விடுபட்டு ஓட முயற்சித்து, அதைத் சந்திக்க மறுக்கும் போது, வேறு பல சோதனைகளை சந்திக்க வழிவகுக்கிறது. ஆபிரகாம் இந்தக் காரியங்களைக் கர்த்தரிடம் எடுத்துச் சென்றவாறு சுட்டிக் காட்டப்படாவிடிலும், அவன் எகிப்தில் ஏராளமான உணவுப் பொருட்கள் இருப்பதை வழிப்போக்கர்கள் கூறிய ஆலோசனை மூலம் அறிந்திருக்க வேண்டும். அவன் எகிப்தை நெருங்கின சமயம், அயல் நாட்டவர் தூர இடங்களிலிருந்து எகிப்து தேசத்திற்கு வந்தால், அவர்களை எகிப்தியர்கள் கொன்று விட்டு அவர்களது மனைவிகளை தங்களுக்குரியவர்களாக்கிக் கொள்ளுகிறார்கள் என்பதை அவன் கேள்விப்பட்டிருந்தபடியால், அவனை பயம் ஆட்கொண்டது. ஆகவே, ஆபிரகாம் சாராளை எகிப்தியருக்கு அறிமுகப்படுத்தும் போது, அவளை தனது சகோதரி என சொல்ல தீர்மானித்தான். இது ஒரு பாதி உண்மையாய் இருந்தாலும், கர்த்தருடைய வாக்குத்தத்த குமாரனான ஈசாக்கை ஜநிப்பிப்பதற்கு தடையாக இருந்திருக்கக்கூடும், ஏனென்றால் இது ஒரு வேண்டுமென்றே ஏமாற்றிய செயலும், ஒரு இழிவான சூழ்ச்சியும் ஆகும் (காண்க 20:1, 2, 12, 18). இதனுடன் கூட, இது கோத்திரத் தலைவனுடைய சுயத்தை மையமாகக் கொண்ட செயல் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. எந்தச் சூழ்நிலைகளிலும், அவனுடைய மனைவியிடம் அன்புகூர்ந்து, மகிழ்விப்பதிலும் மற்றும் பாதுகாப்பதிலும் தவறியதிலிருந்தும் (காண்க எபே. 5:25-29).

“உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும் படிக்கும் [உனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை என்பதை பொருட்படுத்தாமல்] நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான்” (12:13) என்பதே அவனுடைய முதன்மையான அக்கறை என ஆழ்ந்த குரலில் ஆபிரகாம் தெரிவித்துள்ளான்.

சாராளுக்கு லௌகீக தகப்பனார் இல்லாத போதிலும், மற்றும் ஆபிரகாம் அவனது சகோதரனாக இருந்த போதிலும், பழங்கால உலக வழக்கப்படி யாராவது ஒருவர் அவளை ஒரு மனைவியாக ஏற்றுக் கொண்டால், கோத்திரத் தலைவனுக்கு ஒரு மணமகளுக்கான விலைக்கிரயத்தை அவன் செலுத்த வேண்டும். இது ஆபிரகாம் சுயத்தை விரும்பி¸ வஞ்சித்த மற்றொரு செயலாக இருந்துள்ளது: முதலாவது, அவனது உயிர் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவது, இந்த பரிவர்த்தனை மூலம் அவன் செழித்திருக்க வேண்டும். இருந்த போதிலும், பார்வோன் சாராளை அவனுடைய அந்தப்புரத்திற்கு எடுத்துச் சென்ற பொழுது, சரியானபடி நடந்தது என்னவென்றால்: அவன் கோத்திரத் தலைவனுக்கு ஆடு மாடுகளும்; கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களும் கொடுத்தான் (12:16)

பார்வோனுக்கும், அவன் வீட்டாருக்கும் மகாவாதைகள் வந்த பொழுது, அவன் ஏமாற்றப்பட்டுவிட்டான் என்பதை உணர்ந்து, ஆபிரகாமின் நேர்மையின்மையின் நிமித்தம் அவனைக் கடிந்து கொண்டு எகிப்திலிருந்து அவனைத் துரத்தி விட்டான். பிற சமய ராஜா ஒருவனால் ஒரு சுயநல நயவஞ்சகன் என்றும் மேலும் ஒரு நேர்மையற்றவன் என்று கடிந்து கொள்ளப்பட்டும் வெளியே தெரியவந்த போது, ஆபிரகாமுடைய பெருமைக்கு ஒரு பலத்த அடி விழுந்திருக்க வேண்டும். இது ஒரு வருந்தத்தக்க அத்தியாயமாக இருந்த போதிலும், விசுவாசிகளின் தகப்பன் எதிர் காலத்தில், தன் சொந்த திட்டங்களை ஆதாரப்பட்டு செயல்படாதவாறு, கர்த்தரை மட்டுமே சார்ந்து இருக்க வேண்டும் என்று போதிக்க, ஒரு அவசியமான சான்றாக உள்ளது.

விசுவாச மக்களுக்கு, இம்மாதிரியான நிகழ்வுகள் அடிக்கடி சங்கடம் தருபவைகளாக இருந்திருக்கும். அவர்களது பளபளக்கும் கவசத்திலே, ஆவிக்குரிய நாணயங்கள் ஒன்றும் இல்லாமல், அவர்கள் வெறும் குதிரைகளைப் போலிருந்தாலும், நாம் அவர்களை ஒரு உயர்ந்த பீடத்தில் இருக்கிற கதாநாயகர்கள் ஸ்தானத்தை கொடுக்க முனைகிறோம். எப்படி இருந்தாலும். கர்த்தர் அழைத்திருந்த, அவரது ஊழியக்காரர்களின் பாவங்களை வேதாகமம் மெய்யாக எடுத்துரைக்கிறது. அது ஒருபோதும்¸ அவர்களது தோல்விகளை பூசி மெழுகுவதில்லை. நாம் மோசே (எண். 20:1-13), தாவீது (2 சாமு. 11:1-12:14), சாலொமோன் (1 இராஜா. 11:1-43) மற்றும் அப்போஸ்தலர்

களுடைய பெலவீனங்களை வாசிக்கிறோம். வேதாகமத்தில் வரும் குணசாலிகளின் பெலன் மற்றும் பெலவீனம் ஆகிய இரண்டும் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணும் போது, அதனுடைய கணக்கின்படி நம்பிக்கையை தரக்கூடியதாக அமைந்திருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையானது, மனிதனின் ஒரே பரிமாணப் பார்வையைப் போல், பாவங்களையும், குறைபாடுகளையும் குறைத்தோ அல்லது விலக்கி விட்டோ தருகிறதில்லை.

இதனுடன், ஒவ்வொரு தலைமுறையிலும், வேதாகம குணசாலிகளின் பாவங்கள், ஒரு மெய்யான வழியில் சித்தரிக்கப் பட்டு, திருமறை நூல்களில் எடுத்துக் காட்டும் போது, விசுவாச மக்களுக்கு எச்சரிக்கைகளாக அமைந்துள்ளன. கர்த்தருடைய மக்கள் சில நேரங்களில், தாங்கள் மிகவும் பெலசாலிகள் அல்லது தலை சிறந்த ஆன்மீகவாதிகள் என்பதாலும் அவர்களது மித மிஞ்சிய நம்பிக்கையின் நிமித்தம் பாவத் தூண்டுதலில் விழமாட்டோம் என்று எண்ணிக்கொண்டு, கடுமையான பாவத்திற்கு அடிமைப்படுத்தப் பட்டுள்ளார்கள். மத்தேயு 26ல் அவர்கள் போஜனம் பண்ணுகையில; இயேசு: “உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்” என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது, அவர்கள் மிகவும் துக்கமடைந்து, அவரை நோக்கி: ஆண்டவரே, நானோ, நானோ? என்று ஒவ்வொருவராய்க் கேட்கத் தொடங்கினார்கள் (மத். 26:21, 22) பிரதான அப்போஸ்தலர் களில் ஒருவனாகிய பேதுரு கர்த்தரிடம் சொன்னான் “உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்” என்றான். ஆனால், இயேசு அவனை நோக்கி, “இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.” என்றார் (மத். 26:33, 34). கடைசியாக, பேதுரு, “நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன்” என்றான். “சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்” (மத். 26:35), என்பது அடிக்கடி மேற்பார்வையாக அமைந்திருக்கிறது. கர்த்தருடைய ஜனங்கள் தூண்டுதலுக்கு உள்ள சக்தியை குறைவாக மதிப்பீடு செய்யக் கூடாது என்பதே மூன்று வருட காலங்களாக இயேசுவுடன் இருந்த சீஷர்களைப் பொறுத்தவரை, அவர்களது தோல்வியைத் தழுவிய துயர சம்பவங்களை வைத்து, ஒப்பிட்டு பார்க்க முடிகிறது. அவைகளின் பிடியிலிருந்து தப்ப தற்காப்பு வலிமை கொண்டவர்கள் எவரும் இல்லை.

கொரிந்து சபை சகோதரர்கள், தங்களுக்குரிய ஆவிக்குரிய வரங்களில் ஒளி வீசி அதில் அவர்கள் சுகமாய் குளிர் காய்ந்து கொண்டிருப்பதால், அவர்கள் தூண்டுதலுக்கு இணங்கி விட மாட்டோம் என ஒரு வேளை நினைத்திருக்கலாம் என்று கருதி தான், பவுல் இதே மாதிரியான ஒரு எச்சரிக்கையை அவர்களுக்கு

கொடுத்துள்ளார். இதற்கு நேர்மாறாக, அப்போஸ்தலர்: நான் "உங்களை ஆவிக்குரியவர்களென்று" எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், "மாம்சத்துக்குரியவர்களென்றும்," "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும்" எண்ணிப் பேச வேண்டியதாயிற்று (1 கொரி. 3:1) என்று வலியுறுத்தியுள்ளளார். பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், அவர்களது ஆவிக்குரிய வளர்ச்சியின்மைக்கு சான்றாக உள்ளது (1 கொரி. 3:2, 3). "சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக் கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள் நிமித்தம் என்னையும் அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து, இவைகளை எழுதினேன்" (1 கொரி. 4:6).

இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டும் என்றிருக்கிறேன் என்றால் நம்முடைய பிதாக் களெல்லாரும் "மேகத்துக்கு கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" (1 கொரி. 10:1, 2). "எல்லாரும் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞான பானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே" (1 கொரி. 10:3, 4). பிறகு, இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் ஏற்றுக் கொள்ளாததைக் குறித்து, கொரிந்து சபையினருக்கு, நற் போதனைகள் மூலம் அவர்களை நினைவுகூரச் செய்துள்ளார். "அப்படியிருந்தும், அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை: ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்கள் இச்சித்தது போல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்கு திருஷ்டாந்தங்களாயிருக்கிறது" (1 கொரி. 10:5, 6) என்று சொல்லியுள்ளார். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரங்களிலே தேவனை பரீட்சை பார்த்தது போலவும், மற்றும் இப்படியிருக்க தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் "விழாதபடிக்கு" "எச்சரிக்கையாய் இருக்கக்கடவன்" (1 கொரி. 10:12) என்பது அப்போஸ்தலர் கொரிந்து சபைக்கு கொடுத்த எச்சரிப்பாயும் மேலும், இந்த சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவர்களுக்குச் சொல்லிக் கொடுத்த பாடமாகவும் உள்ளது.

ஆபிரகாமுடைய பாவமானது, இன்று நமக்கு ஒரு எதிர்மறையான உதாரணமாய் இருக்கிறது. "யாரிடம் அன்பாயிருக்க வேண்டுமோ, யாரை சந்தோஷமாய் வைத்திருக்க வேண்டுமோ மற்றும் யாரை பாதுகாக்க வேண்டுமோ, அவர்களைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல், நம்மைத் தற்காக்கும் நோக்கத்தில் வஞ்சகமாக, மாயையான ஒரு வலையைச் சுற்றி விட்டு சுய நலவாதியாய் இருக்கக்கூடாது" என்று

கர்த்தருடைய வார்த் தையானது நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

---

## இறுதிக் குறிப்புகள்

[1]Kenneth A. Mathews, *Genesis 11:27—50:26*, The New American Commentary, vol. 1B (Nashville: Broadman & Holman Publishers, 2005), 109. [2]Gordon J. Wenham, *Genesis 1—15*, Word Biblical Commentary, vol. 1 (Waco, Tex.: Word Books, 1987), 274. [3]NASB ஆனது ஆதியாகமம் 12:2ல் "நீ ஆசீர்வாதமாயிருப்பாய்" என்று எபிரெய சொற்களுக்கு நேரான அர்த்தத்தைத் தருகிறது. எப்படியாயினும், அதிகப்படியான மொழி பெயர்ப்புகள், மெய்யாகவே இக்கூற்றை மிகவும் முக்கியமான ஒன்றாக எடுத்துக் காட்டாமல், ஓரமான கருத்துரைகளும் மற்றும் அடிப்படைக் குறிப்புக்களாகவும் வெளிப்படுத்துகின்றன. [4]ஆதியாகமம் 14:14ல், ஆபிரகாமிடம் "தன் வீட்டிலே பிறந்த" கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்கள் இருந்தார்கள் எனக் கூறியுள்ளதின்படி, இவர்களை எபிரெய பதத்தில் (עֶבֶד, *'ebed*, ஈபெட்) என்பது "வேலையாட்கள்" அல்லது "அடிமைகள்" என்னும் அர்த்தம் தருவதாய் இருந்தாலும், மேற்கூறிய சந்தர்ப்பத்தில், இவர்களை அடிமைகள் என சுட்டிக் காட்டுவதைப் போல் தெரிய வருகிறது. [5]ஆபிரகாமிடம் மந்தை மேய்ப்பர்கள் மற்றும் வீரர்கள் பலர் அடங்கிய பெரிய குழு ஒன்று இருப்பதைப் பார்க்கும் போது (14:14), பொதுவாக அவனது மனைவிகள் மற்றும் அவனது பிள்ளைகளையும் சேர்த்துப் பார்த்தால், ஆயிரத்திற்கும் அதிகமான ஜனங்களைக் கொண்ட திரள் கூட்டத்தைக் கொண்டவனாக இருந்திருக்க வேண்டும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. [6]ஆபிரகாம் ஆரானிலிருந்து புறப்பட்டு தமஸ்கு வழியாய் கானானுக்கு வந்து கொண்டிருந்த பயணத்தின் பொழுது, அவனுக்கு தமஸ்கு ஊரானாகிய எலியேசர், அவனது வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இயல்பாய் அமையப் பெற்றிருக்க வேண்டும் (15:2). [7]புதிய ஏற்பாட்டின் காலங்களில், சீகேம் என்ற பழங்கால இடத்திற்கு அருகில் சீகார் என்ற ஊர் இருந்தது (யோவான் 4:5). இன்று, நப்லஸ் என்ற ஊர், அதன் அருகாமையில் காணப்படுகிறது. [8]உபாகமம் 11:30ல் "மோரேயின் கர்வாலி" (NASB) என்று பயன்படுத்தியதை, அதே எபிரெய பதத்தில் பன்மையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. [9]கர்த்தர், ஆபிரகாமிடம் முன்பு ஆரானில் இருக்கும் போது பேசியதாகக் கூறப்பட்ட போதிலும் (12:1, 4) அவர் காட்சி தந்ததாக எதுவும் சொல்லப்படவில்லை. [10]காண்க 13:15, 16; 15:18; 17:7-10, 12, 19; 22:17, 18; 24:7; 26:3; 28:4, 13 ஆகியவற்றைப் பார்க்க.

[11]நிறைய பலிபீடங்கள் கோத்திரத் தலைவர்களால் கட்டப்பட்டன: ஆபிரகாம் சீகேமிலும் (12:7), பெத்தேலிலும் (12:8), எபிரோனிலும் (13:18) மற்றும் மோரியா மலையிலும் (22:9); ஈசாக்கு பெயர்சபாவிலும் (26:25); மற்றும் யாக்கோபு சீகேமிலும் (33:20), பெத்தேலிலும் (35:7) கட்டினார்கள். [12]"ஆயி" என்பதைக் கண்டு பிடித்து, அதை ஒரு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள, பார்க்க R. K. Harrison, "Ai," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:81–84. [13]மழையின்மை மற்றும் பஞ்சத்தின் காரணமாக, மக்கள் எகிப்திற்கு வந்து கொண்டிருந்தார்கள் என்று, வேதாகமத்தை தவிர வெளியே உள்ள பழங்கால பதிவுகள் தெரிவிக்கின்றன. உதாரணமாக, ஏதோமில் இருந்து வந்த பெடௌயின் (Bedouin) பழங்குடியினர், எகிப்திற்குள் நுழைய அனுமதித்ததும் மற்றும் "அவர்களை உயிரோடே காப்பாற்றுவதற்கும், மேலும் அவர்களது கால் நடைகளை சாகாமல் பாதுகாக்கவும்" நீர் வளம் கொண்ட குளங்களையும் கொடுத்ததாக, ஒரு எகிப்திய கடிதம் சுட்டிக் காட்டுகிறது. (John A. Wilson, trans., "The Report of a Frontier Official," in *Ancient Near Eastern Texts Relating to the Old Testament*, 3d ed., ed. James B. Pritchard [Princeton, N.J.: Princeton University Press, 1969], 259.) [14]ஆரானை விட்டு பயணப்படும் போது, ஆபிரகாமுக்கு எழுபத்து ஐந்து வயதும் (12:4), மற்றும் சாராள் அவனைவிட பத்து வயது இளையவளாயிருந்தாள் (17:17). [15]"பார்வோன்" என்பது, எகிப்திய பாஷையிலே "உயரிய இல்லம்" என்பதன் உண்மையான அர்த்தம் கொண்டும், ராஜாவினுடைய அரண்மனை என்று ஒரு குறிப்பாகவும் உள்ளது. காலப்போக்கில், இது ராஜாவுக்கே உள்ள ஒரு பெயராக வழங்கப்பட்டு தொண்டு தொட்டு வந்தது. [16]ஒரு "மணமகளுக்குரிய விலைக்கிரயம்" என்பது, பரிசமாகக் கொடுப்பது என்பதை புரிந்து

கொள்ள முடிகிறது (מֹהַר, *mohar*, மோகர்) (காண்க 34:11, 12; யாத். 22:16; 1 சாமு. 18:22-27). சாராளுடைய தகப்பனார் தேராகு உயிரோடே இல்லாததினால் (11:32), மணமகளுக்குரிய விலைக் கிரயம், அவளது சகோதரனான ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. [17]பஞ்சத்தின் காரணமாக, ஆபிரகாம் கானானை விட்டு எகிப்திற்கு இடம் பெயர்ந்து செல்வது, லோத்தும் அவனுடன் இருந்த திரளான மக்களும், அவர்களுடன் இருந்த மிருக ஜீவன்களும் சேர்ந்து அவனுடன் சென்று ஆகாரமும், தண்ணீரும் அங்கு பார்ப்பதற்காக தான் என்பதன் காரணத்தை விளங்கிக் கொள்வதாய் இருக்கிறது. [18]Juris Zarins, "Camel," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 1:825–26. [19]"கர்த்தர் இந்த ராஜாவை வாதித்ததினால்" என்று சொல்லப்படுவது 2 இராஜாக்கள் 15:5இல் *nega'* என்பதின் வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. [20]இருந்த போதிலும், அவனுடைய மறுமொழியானது இதைப் போன்ற ஒரு தருணத்தில் 20:11-13ல் பதிவு செய்யப்பட்டுள்ளது

[21]Gerhard Friedrich, "εὐαγγελίζομαι," in *Theological Dictionary of the New Testament*, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 2:707–8. [22]இதர முக்கியமான வேதாகம குணசாலிகளை, கர்த்தர் விசாரித்து அவர்களது பழைய வாழ்க்கையை விட்டு விட்டு, அபாயகரமான ஊழியங்களைச் செய்ய அழைத்துள்ளார் என்பதை அவரே தெரியப்படுத்தியுள்ளார். மோசே (யாத். 3:1-4:17), ஏசாயா (ஏசாயா 6:1-13), மற்றும் தர்சு பட்டணத்தானாகிய சவுல் (அப். 9:3-20) என்பவர்கள், குறிப்பிட்ட உதாரணமாக அமைந்துள்ளார்கள். [23]பழங்கால சீகேமானது கி.மு. 4500க்கு பின்னால், அதாவது ஆபிரகாமின் காலத்திற்கு; அருகில் உள்ள காலமாகவும், அச்சமயம் நல்லதொரு கட்டுக் கோப்பான பெரிய சமுதாயம் அந்த இடத்தில் இருந்திருக்க வேண்டும் என்று தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள். பார்க்க Lawrence E. Toombs, "Shechem (Place)," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 5:1178–79. [24]எலியாவின் அனுபவங்களை 1 இராஜாக்கள் 18:16-19:18ல் ஒப்பிடுக. [25]தமஸ்குவிலுள்ள எலியேசரை, ஆபிரகாம் தனது வாரிசாக தத்து எடுத்துக் கொள்ள முயற்சித்த பொழுதும் (15:2-4), மற்றும் சாராளுடைய பணிப் பெண்ணான ஆகார் மூலம், தனக்கு ஒரு குழந்தையைப் பெற ஒப்புக் கொண்டபொழுதும் (16:1-4), இதைப் போன்ற அதிகப்படியான சம்பவங்கள் ஆபிரகாமின் வாழ்வில் நடந்தேறியதற்கு, அவனது நடத்தை ஆதியாகமத்தில் சான்று பகருகின்றது. இதை மறுபடியும் பார்க்க முடிகிறது. ஆபிரகாம் நம்பமுடியாததால் நகைத்து: நூறு வயதானவனுக்கு பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டு, இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக! என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினான் (17:15-18). இறுதியாக, ஆபிரகாம் கேரார் ராஜாவிடம், சாராளை தனது சகோதரி என்று கூறியது, அவன் எகிப்தில் செய்தது போலவே தொடர்ந்துள்ளது மற்றும் இந்த நடத்தையினால், அவன் மறுபடியும் பொய் சொல்லி விட்டான் (20:1, 2).